விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 10 ஞாயிற்றுக்கிழமை (24.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 188

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## அரசியல் தீர்வு தொடர்பில்

## மன்மோகனின் கவனத்தை மாற்றிவிட்டார் மகிந்த

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேச முற்பட்ட இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் கவனத்தை தவறான புள்ளிவிபரங்களைக் கூறி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திசை திருப்பியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தியப் பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் பிரேசிலின் றியோடி ஜெனிரோ நகரில் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பில் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மத்தாய் ஊடகவியலாளர்களுக்கு வெளியிட்ட தகவல்களை அடிப்படையாக் கொண்டே இச் செய்தி வெளியாகியுள்ளது.

இச் சந்திப்பு தொடர்பில் ரஞ்சன் மத்தாய் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் போருக்குப் பின்னரான நல்லிணக்க முயற்சிகள் மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பில் இச் (19ஆம் பக்கம் பார்க்க)

## தகைமையுள்ள சுமார் 1300 பட்டதாரிகள் பிரதேச செயலகங்களில் இணைக்கப்படுவர்

### யாழ்.அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வுக்கு தோற்றி உரிய தகைமைகளைக் கொண்டுள்ள சுமார் ஆயிரத்து 300க்கு மேற்பட்ட பட்டதாரிகள் விரைவில் பிரதேச செயலகங்களில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என யாழ். அரச அதிபர் சு.அருமைநாயகம் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு கட்டம் கட்டமாக நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டு நியமனம் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு இம் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை நேர்முகத் தேர்வு நடைபெற்றது.

இதனடிப்படையில் தகைமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பட்டத்தகைமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள பட்டதாரிகள் சுமார் ஆயிரத்து (19ஆம் பக்கம் பார்க்க)

# மீளக்குடியேறிய மக்களை திருப்பியனுப்பியது கடற்படை

(மன்னார்), மன்னார் மாவட்டம் பேசாலைக்கு அருகில் உள்ள வீட்டுத்திட்டம் ஒன்றில் ஆறு வருடங்களின் பின்னர் மீள்குடியேறி இருந்த குடும்பங்களை அந்தப் பகுதியில் உள்ள கடற்படையினர் வெளியேற்றி இருப்பதாக தெரியவருகிறது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

ஐம்பது வீட்டுத்திட்டம் என்று அழைக்கப்படும் இந்த வீட்டுத் திட்டத்தில் வசித்து வந்த குடும்பங்களை மன்னார் பிரதேச செயலாளர் உட்பட அரச,அதிகாரிகளே மீள்குடியேறுவதற்கு அனுப்பி இருந்தார்கள். இந்த நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட அந்தக் குடும்பங்கள் அங்கிருந்து திடீரென்று வெளியேற்றப்பட்டிருப்பது இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் கவலையையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.


ஐம்பது வீட்டுத்திட்டத்தில் இருந்து கொண்டு பேசாலையில் தொழில் செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிச் சென்ற ஒரு குடும்பத்தரிடமே அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று உத்தரவு முதலில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் இருந்து போர் தொடுப்போம்



ஈழத் தமிழர்கள் இனியும் தாக்கப்படுவதை பொறுத்துக் கொள்ள முடியாது எனவும் தமிழர்கள் மீது ஒரு துரும்பு பட்டாலும் இரும்பு பட்டாலும் இனி இந்தியாவில் இருந்துதான் போர் கிளம்பும் என்பதை இலங்கை தலைவருக்கு தெரிவித்துக் கொள்ளவதாகவும் புதிய தமிழகம் கட்சியின் நிறுவனர் டாக்டர் கிருஷ்ணசாமி எச்சரிக்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் ஆலோசகர் ஹேமகுமார ராஜினாமா



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விவசாய அபிவிருத்தி ஆலோசகர் பதவியில் இருந்து முன்னாள் (19ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடி அகற்ற கிரனைட் வெடித்தது!

### பெண் உட்பட மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கிரனைட் வெடித்ததில் ஒரு பெண் உட்பட மூன்று ஹலோரஸ்ட் பணியாளர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்றுக் காலை 7.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ் வெடிப்புச் சம்பவத்தில் சுதுமலை தெற்கு மானிப்பாய் சாவற்காட்டைச் சேர்ந்த பரமசிவன் பாமினி (வயது 20) என்ற பெண்ணும், குருநகரினைச் சேர்ந்த ஒரு பிள்ளை யின் தந்தையான ஜேசுதாசன் ஜெப்றியூட் (வயது 34) என்ற குடும்பஸ்தரும், மாமுனை செம்பியன்பற்றினைச் சேர்ந்த வரும் இரு பிள்ளைகளின் (19ஆம் பக்கம் பார்க்க)

## 2012 ஆண்டுக்கான யாழ் விருது

### நயினாதீவு அமுதசுரபி அன்னதானசபைக்கு

யாழ். மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழு வருடம் தோறும் வழங்கும் யாழ்.விருது இந்த ஆண்டு நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபைக்கு வழங்கப்படுகிறது.

சைவ சமய விவகாரக் குழுவின் மகாசபை நேற்றைய தினம் யாழ். மாநகர சபையின் ஆணையாளரும் குழுவின் தலைவருமான செ.பிரணவநாதன் தலைமையில் கூடியபோது இம் முடிபு ஏகமனதாக எடுக்கப்பட்டது.




சுமார் 70 ஆண்டுகளாக அன்னதானம் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையானது வருடம் தோறும் இலட்சக் கணக்கான அடியார்களுக்கு அமுது அளிக்கும் அரிய பணியை சிறப்பாக செய்து வருகிறது.

நயினாதீவு மஹோற்சவ காலத்தில் அன்னதானம் வழங்கும் பணியை கூட்டு முயற்சியாக பல பெரியவர்கள் சேர்ந்து மிகச்சிறப்பாக செய்து வருகின்றனர். இப் பணியை கௌரவிக்கும் வகையில் யாழ் விருது அமுதசுரபி அன்னதான சபைக்கு வழங்கப்படுகிறது. (ந-6)

After O/L or A/L LEARN ACCA @ K-AIMS
We Make You Progress Everyday...
மேலதிக விபரங்களுக்கு 0772 555 814
Diploma — Diploma in Accounting and Business
+ UK Degree — BSc (Hons) Applied Accounting (Oxford Brookes University)
+ ACCA — Association of Chartered Certified Accountants- U.K
ACCA கற்கை நெறியில் கடந்த 4 வருடங்களாக கொழும்பில் தடம் பதித்த நிறுவனம் இன்று யாழ்ப்பாணத்தில்
Colombo No 35-1/1 Upatissa Road, Bambalapitiya, Colombo - 04 Jaffna No 3-1/2 Sirambiyadi Lane, (Off Stanly Road), Jaffna
(C-322)

உங்களது அனைத்து வகையான பாவனை (Bill, Reload) கட்டணங்களை ஒரே இடத்தில் செலுத்திக் கொள்ளுங்கள்!
Dialog, Sri Lanka Telecom, airtel, etisalat, Sri Lanka Telecom Mobitel We Care. Always., (CEB), WESTERN UNION MONEY TRANSFER, HSBC
வெளிநாடுகளில் இருந்து உங்கள் உறவுகளிடம் இருந்து வரும் பணத்தை WESTERN UNION பணப்பரிமாற்ற முறை மூலம் கணப்பொழுதில் பெற்றுக் கொள்ளலாம்.
இவ் அனைத்து சேவைகளையும் தாமதம் இன்றி இலகுவாக பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள் அருகில் உள்ள
சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சி அறைகளை
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம் மானிப்பாய் நெல்லியடி சாவகச்சேரி கிளிநொச்சி சங்கானை
SINGER EXPRESS PAY

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


வட. மாகாணத்தில் கல்வி அபிவிருத்தி மற்றும் கற்றல் அடைவு மேம்பாட்டின் அறைகூவல்களுக்கு முகம் கொடுத்தல் எனும் கருப்பொருளில் ஆறுதல் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரண்டு நாள் கல்விசார் கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாணம் சேர் .பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ஆறுதல் நிறுவனத்தில் ஆரம்பமானது. இக்கல்வி சார் கருத்தரங்கில் ஆறுதல் நிறுவனத்தின் அமைப்பாளரும் ஓய்வு பெற்ற வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரும் கருத்தரங்கின் தலைவருமான சுந்தரம் டிவகலாலா, கருத்தரங்கின் முதலாவது அமர்வுக்கு தலைமை தாங்கிய ஓய்வுபெற்ற யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் அ. பஞ்சலிங்கம், இரண்டாவது அமர்வுக்கு தலைமை தாங்கிய யாழ். பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் கருத்தரங்கில் பங்கு கொண்டிருந்தவர்களையும் படத்தில் காணலாம்.

# தமிழினிக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பம் ஏனைய தமிழ் கைதிகளுக்கும் வேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினிக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பம் போன்று ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி என அழைக்கப்படும் சுப்பிரமணியம் சிவகாமியை புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழினி தொடர்பில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இத் தீர்ப்பானது சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் கொண்டு வர வேண்டும் எனவும், மக்கள் கண்காணிப்புக் குழு ஏற்பாட்டாளர் என்ற முறையில் இத் தீர்ப்பை தான் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமிழினிக்கு வழங்கப்பட்டுள்ள இச்சந்தர்ப்பம் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏன் வழங்கப்படவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், சந்தேகங்களின் அடிப்படையிலும், வழக்கு இழுத்தடிக்கப்படும் நிலையிலும் தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். தமிழினி போன்று இன்னும் பல பெண்களும், அவர்களது குழந்தைகளும் கூட சிறையில் உள்ளார்கள்.

வயோதிபர்களும், மதகுருமார்களும் இருக்கிறார்கள். குற்றங்களுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டவர்களும் நீண்ட காலமாக சிறையில் இருக்கின்றார்கள்.

தமிழினிக்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பம், ஏனைய தமிழ் கைதிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். புனர்வாழ்வு அல்லது பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் தமது குடும்பங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

தமது அரசியல் தேவைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளின் முன்னாள் பிரமுகர்களுக்கு அரசாங்கம் பொது மன்னிப் பும், சந்தர்ப்பங்களும் வழங்கப்படுகின்றதா என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமும், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவும், உரிய முறையில் பதிலளிக்க வேண்டும் என மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (8,11)


## விற்பனைக்கு

Nokia போன் மலிவான விலையில் உள்ளது.

தொடர்புகளுக்கு:-

072 44 76403

(8698)

## வான் விற்பனைக்கு

1998 Model Toyota Dolphin ரக HC XXXX தொடரிலக்கம் உடைய வாகனம் விற்பனைக்கு உண்டு. Dual A/C, alloy wheel, Five door, Full seet set லீசிங் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

Con: 0774722522

(8694)

## செல்லா சினிமா- யாழ்ப்பாணம்





# சிறப்பு முகாம் என்ற பெயரில் ஈழத் தமிழனை சிறைப்படுத்தாதே

செங்கல்பட்டு- பூந்தமல்லி பகுதிகளில் சிறப்பு முகாம் என்ற பெயரில் சிறைப்படுத்தி வைத்திருக்கும் ஈழத் தமிழர்களை, தமிழக அரசு ஏற்கெனவே அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் விடுதலை செய்யவேண்டும் எனவலியுறுத்திசெங்கல்பட்டில்நேற்று முன்தினம்பல்வேறு அமைப்புகள் பங்கேற்றுக் கொண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கடந்த மாதம் தங்களை விடுவிக்கக் கோரி செங்கல்பட்டு முகாம் சிறைவாசிகளான ஈழத் தமிழர்கள் சாகும் வரையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர்.

போராட்டத்தை பேச்சுவார்த்தையின் மூலம் முடிபுக்கு கொண்டு வந்த தமிழக அரசு, கடந்த 15 ஆம் திகதி அன்று சிறைவாசிகளை படிப்படியாக விடுதலை செய்வதாக ஒத்துக் கொண்டது. ஆனால் இதுவரையில் எவரும் விடுதலை செய்யப்படவில்லை. தமது வாக்குறுதியைக் கைவிட்ட தமிழக அரசைக் கண்டித்து தற்போது மீண்டும் செங்கல்பட்டு முகாம் சிறைவாசிகள் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். தற்போது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம்நடத்திய ஐவர் உடல்நிலை மோசமாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஈழத் தமிழர்களை இம் முகாமிலிருந்து விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தியும், தமிழக அரசு தமது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தியும்சென்னையில்தமிழ் அமைப்புக்களும், உணர்வாளர்களும் ஒன்று கூடி தமிழக முதல்வருக்கு கடந்த 16 ஆம் திகதி அன்று பல நூற்றுக் கணக்கில் அவசரத் தந்திகளை அனுப்பும் போராட்டத்தினை நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசிய தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சித் தலைவர் தோழர் பெ. மணியரசன் தமிழகத்தில் செயல்படுகின்ற ஈழத்தமிழர் சிறப்பு முகாம்கள் தமிழினத்தின் அவமானச் சின்னமாக கருதப்படவேண்டும். எங்கோ இருக்கும் அவுஸ்ரேலியா போன்ற அயல்நாடுகள் எல்லாம் ஈழத்தமிழர்களை சக மனிதனாக அங்கீகரித்து அவர்களுக்கு குடியுரிமை அளித்து வாழ்க்கை அளிக்கிறது.

ஆனால் இந்திய அரசு ஈழத்தமிழர்களுக்கு இங்கு ஏன் குடியுரிமை வழங்க மறுக்கிறது? தமிழ் நாட்டுத் தமிழர்கள் இன உணர்வுடன் ஒன்று சேர்ந்து போராடாமல் இருந்ததும் இதற்கு காரணம். உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஈழ அகதிகளின் உயிருக்கு ஏதேனும் கேடு நேர்ந்தால் அதன்பின் சடங்குப் போராட்டங்கள் நடைபெறாது. தமிழ்த் தேசிய விடுதலைக்கான போராட்டத்தின் தொடக்கமாக அது அமையும் என்றார். (8-2)

# இலங்கையின் அபிவிருத்தியில் ஈரான் அதிக பங்கெடுக்கும்

## மகிந்தவுக்கு நிஜாட் வாக்குறுதி

ஈரான் எத்தகைய பிரச்சினைகளை எதிர் கொண்டாலும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான உதவிகளைச் செய்யும் என அந்நாட்டின் ஜனாதிபதி மொஹமட் அஹமது நிஜாட் தெரிவித்துள்ளார்.

பிரேசிலின் றியோடி ஜெனிரோ நகரில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் றியோ-20 மாநாட்டில் கலந்து கொள்ள சென்றிருந்த இலங்கை ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷ, ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமது நிஷாட்டை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் மின்சார துறை சார்ந்த வளர்ச்சிப் பணிகளுக்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் ஏனைய உதவிகளை வழங்கத்தயாராக இருப்பதாக ஈரான் ஜனாதிபதி இதன்போது இலங்கை ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் தெஹ்ரானில் இடம்பெறவுள்ள அடுத்த அணிசேரா நாடுகளின் மாநாடு தொடர்பிலும் இவர்கள் இருவரும் ஆராய்ந்த தாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கையின்வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர்களான அனுர பிரியதர்சன யாப்பா, விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, மகிந்த சமரவீர, பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (8-11)

# மாணிக்கவாசகர் குருபூசைவிழா

இந்து-சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் புகழி சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெறவுள்ளது. (8)

# ஹெரோயின் வைத்திருந்த இந்தியர் உட்பட இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் 773 கிராம் ஹெரோயினை வைத்திருந்த இருவரினை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகனேசன் தெரிவித்துள்ளார்.

குறித்த இருவரும் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் ஒருவர் இந்தியர் எனவும் மற்றையவர் 34 வயதுடைய பேசாலையை சேர்ந்தவர் எனவும் தெரியவருகின்றது.

மேற்படி இருவரும் நீண்டகாலமாக ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவர்களுடைய பின்னணி தொடர்பாக பொலிஸார் விசாரணைகளினை மேற்கொண்டு வருகின்றனர். (4,8)

# பட்டதாரிகளுக்கு அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் HNDA, HNDC கல்வி பயின்று பட்டம் பெற்ற மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் செல்வரதன் தலைமையில் நடைபெறும் இவ் அவசர கலந்துரையாடலிற்கு அனைத்துப்பட்டதாரிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)


## யூலை அதிர்ஸ்டம்

இலங்கையில் அதிகமாக விற்பனை மற்றும் எரிபொருட் சிக்கனம் கொண்ட பஜாஜ் மோட்டார் சைக்கிள்

BAJAJ




டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அங்கிகாரம் பெற்ற விற்பனை முகவர்

அபி மோட்டார்ஸ் வாடிக்கையாளர் சேவை விஸ்தரிக்கும் நோக்கில் 01/07/2012 தொடக்கம் 31/07/2012 வரைக்கும் லீசிங் அடிப்படையில் கொள்வனவு செய்யும் முதல் 50 வாடிக்கையாளர்களில் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்படும் ஒரு நபருக்கு

ஒரு பவுண் தங்கம் இலவசம்

குறைந்த முற்பணம்

உத்தரவாதம் தேவையில்லை

3 வருடங்கள் வரையான திருப்பி அளிக்கும் காலம்

தொடர்புகளுக்கு உடன் அழையுங்கள்

077 2247 666 077 200 9409

அபி மோட்டார்ஸ்

இல.250, பருத்தித்துறை வீதி, நெல்லியடி கரவெட்டி

(8696)

நிபந்தனை உண்டு

# யாழில் கழிவெண்ணெய் வீச்சு கலாசாரம் தோன்றியுள்ளது

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழில் கழிவெண்ணெய் வீச்சுக் கலாசாரம் அதிகரித்துள்ளதாகவும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஊடகங்களே பொலிஸாருக்கு உதவ வேண்டும் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ குகனேசன் உதவிக்கரம் நீட்டுகின்றார்.

அண்மையில் வலி. வடக்கில் ஓய்வு பெற்ற கிராம அலுவலர் மீது கழிவெண்ணெய் வீசியவர்கள் சில நாட்கள் சென்ற பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஜெயக்குமார் வீட்டின் மீது கழிவெண்ணெய் வீசப்பட்டது. வலி. வடக்கில் தமது இடங்களில் மீள்குடியமர்த்த வேண்டும் என கூறப்பட்டு நடைபெற்ற ஆர்ப் பாட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு கழி வெண்ணெய் வீசப்பட்டது. ஆயினும் இவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. இதற்கான காரணம் யாது? என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

இதற்கு யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் பதிலளிக்கையில்,

தற்போது யாழில் கழிவெண்ணெய் வீச்சு அதிகரித்துள்ளது. இதற்கு இங்குள்ளவர்களே காரணமாக உள்ளனர்.

கழிவெண்ணெயும் இங்குள்ளவர்களினாலேயே கொடுக்கப்படுகிறது. சில நேரங்களில் தனிப்பட்ட விரோதம் காரணமாகவும் இவை இடம்பெறுகின்றன என்பதனை முதலில் ஊடகங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஊடகவியலாளர்கள் பொலிஸாருக்கு உதவி செய்தல் வேண்டும். கழிவெண்ணெய் வீசுபவர்களை ஊடகங்கள் பொலிஸாருக்கு இனங்காட்ட வேண்டும்.

தற்போது வரை நடைபெற்றுள்ள கழிவெண்ணெய் வீச்சு சூத்திரதாரிகளில் ஒருவரை கைது செய்துள்ளோம். ஏனைய சம்பவங்கள் தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

கழிவெண்ணெய் வீச்சு சம்பவங்கள் அனைத்துக்கும் பொலிஸாரையோ இராணுவத்தினரையோ நாம் குறை கூற முடியாது.

கழிவெண்ணெய் வீசி வருபவர்கள் பொலிஸாரிடமோ இராணுவத்தினரிடமோ கூறிவிட்டு கழிவெண்ணெய் வீசுவதில்லை.

ஆக பொலிஸார் மட்டுமே இச் சம்பவங்களை கட்டுப்படுத்த வேண்டும் என நினைப்பது தவறு. ஊடகங்களும் புலன் விசாரணைகளினை மேற்கொள்ள வேண்டும். தலைநகர் கொழும்பில் உள்ள ஊடகவியலாளர்கள் போல் புலன் விசாரணைகள் மேற்கொண்டு தகவல்களினை திரட்ட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## போதைப்பொருள் எதிர்ப்பு தினம்

(யாழ்ப்பாணம்)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய கல்வி வைத்திய உத்தியோகத்தர் வைத்திய கலாநிதி வை.யோகேஸ்வரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன், தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுலகுமார், யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன், யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் வி.கே.இரத்தினகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

## வாரம் ஒரு தகவல்

### சரித்திரச் சம்பவம்

"நல்வாழ்த்துக்கள்"

"என்ன... திடீரென?"

"உங்களுக்கு இன்றைக்கு பிறந்த தினம் சேர்!"

"ஓ... மறந்து விட்டேன்!"

"என்ன இது... நீங்கள் ஒரு சரித்திரப் பேராசிரியர்... சரித்திர கால சம்பவங்களெல்லாம் சரியாக ஞாபகம் வைத்திருக்கிறீர்கள்... ஆனால், உங்களுடைய பிறந்த நாளை மறந்து விட்டீர்கள்...!"

"ஹி! அது ஒருபுறம் இருக்கட்டும்... உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா?"

"ஏதோ ஒரு சரித்திர விடயம் சொல்லப் போகிறீர்கள்!"

"ஆமாம்! கடந்த 1957 ஆம் ஆண்டிலே நடந்த சம்பவம்... செக்கோஸ்சிலவாகியாவில் சாத்தான் ஏரி ஒன்று உள்ளது! ஒரு பையன் படகிலேயிருந்து தவறி விழுந்துவிட்டான். அவனைத் தேடி நீச்சல் வீரர்கள் போனார்கள்... ஓர் ஆழமான இடத்திலே ஏரியின் தரைப்பகுதியிலே குதிரைகள், பீரங்கி சகிதமாக ஜேர்மன் படைப்பிரிவு ஒன்று போருக்குத் தயாராகிக் காத்துக் கொண்டிருந்தது!"

"ஆச்சரியமாக இருக்கின்றதே... அது எப்படி?"

"நீச்சல் வீரர்கள் கரையேறி வந்து இந்த விடயத்தைக் கூறியதும் எல்லோருக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது! ஆனால்... அதற்குப் பின்பு பலர் ஆராய்ச்சி செய்து உண்மையைக் கண்டறிந்தனர்!"

"அது என்ன?"

"1945 ஆம் ஆண்டு இரண்டாவது உலகப் போரின் இறுதிக் கட்டத்திலே நாஜிப் படைகள் ரஷ்யக் குளிருக்குப் பயந்து பின் வாங்கியது. அப்போது ஜேர்மன் படைப்பிரிவு ஒன்று உறைந்து போயிருந்த இந்த ஏரி வழியாக ஓடி வந்த வேளையில் பனிப்பாறை பிளந்து உள்ளே போயிருந்தது! அப்படியே சமாதியாகி விட்டது! அதைத்தான் இந்த வீரர்கள் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள்!"

"உங்களிடம் வந்து விட்டால் பழைய கால சமாச்சாரங்களுக்கு பஞ்சமே இல்லை; சேர்!... செவிக்கு விருந்து கொடுத்து விட்டீர்கள்... உங்களுடைய பிறந்த நாள் இன்றாகும். வாய்க்கும் அதுபோல ஏதாவது கொடுக்கக்கூடாதா?"

"இதோ வைத்திருக்கிறேனே லட்டு... எடுத்து சாப்பிடுங்கள்!"

"நன்றி...! சேர்...! உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதோ இல்லையோ... கடந்த வருடம் உங்களுடைய பிறந்த நாளுக்கும் லட்டு தானே கொடுத்தீர்கள்... அதுவும் சுவையாக இருந்தது... அதேமாதிரி இதுவும் சுவையாக இருக்கின்றது!"

"அதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!"

"ஏன்?"

"அதுவேதான் இது! அப்பொழுது தயார் செய்தது தான்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

24.06.2012
(ஆனி 10, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 9.48 மணிவரை
மகம் பின்னிரவு 4.55 மணிவரை
இராகுகாலம் 4.25-5.55 மணிவரை
சுபநேரம் 8.55-10.25 மணிவரை
ஸ்கந்த பஞ்சமி,
மணிவாசகர் குருபூசை

**மேடம்** இனிமையான நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோஷம் காண்பீர்கள்.

**இடபம்** தாய் வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், விருந்தினர் வருகையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், பொது விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஈடுபாடு காட்டுவீர்கள், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண்பீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள்.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற கண்ணனை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** பிறரது தேவைக்காக சில அலைச்சல்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், அமைதிக் குறைவான நாள்.

**துலாம்** எதிர்பாராத வகையில் ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், எதிர்கால வெற்றிக்கு திருப்பு முனையான நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், கௌரவமானவர்களின் தொடர்புகள் நன்மையளிக்கும்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், அதிக பிரயாசை எடுப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், ஆலய வழிபாடு ஆனந்தமளிக்கும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு.

**மகரம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**மீனம்** சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், தவறிய பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம், உடல் நலத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

வளவன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 90-110 | 100 |
| பச்சைமிளகாய் | 230 | 200 | 250 |
| தக்காளி | 130 | 140 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 |
| கோவா | 60 | 110 | 80 |
| கரட் | 100 | 140 | 160 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 100-120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 100 |
| பாகற்காய் | 100 | 180 | 100 |
| வெண்டிக்காய் | 60-70 | 90 | 120 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | -- |
| பயற்றங்காய் | 160 | 170 | 80 |
| லீக்ஸ் | 150 | 140 | 160 |
| பீற்றூட் | 70 | 70 | 100 |
| கறிமிளகாய் | 140 | 140 | 180 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 140 |
| போஞ்சி | 140 | 170 | 180 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 10 | 15 |
| தேசிக்காய் | 130-150 | 110 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 16-20 |

## கட்டுத்துவக்கு வைத்திருந்த மூவர் கைதாகினர்

(கொழும்பு)

நாவலப்பிட்டி பல்லெகம பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி கட்டுத்துவக்கு வைத்திருந்த மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டி பொலிஸார் நேற்று சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உலப்பனை பகுதியை சேர்ந்த இவர்கள் நேற்று நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (அ-9)

# கொம்பனித் தெருவில் ஏழு ஏக்கர் காணி அரசாங்கத்தால் அபகரிப்பு

## மக்களை வீதியில் இறக்கி போராடுவோம் என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

**அபிவிருத்தி என்ற பெயரில் கொழும்பு கொம்பனித் தெருவில் வாழும் மக்களை வெளியேற்றி 7 1/2 ஏக்கர் காணியை அரசாங்கம் பலாத்காரமாக சுவீகரித்துள்ளதாக குற்றம் சாட்டும் ஐ.தே.க.வின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இதற்கெதிராக மக்களை வீதியில் இறக்கி போராடப் போவதாகவும் நியாயம் கேட்டு நீதிமன்றம் செல்லப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இதனைத் தெரிவித்துள்ளார். இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த மே மாதம் 4 மற்றும் 30 ஆம் திகதி ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கொம்பனி வீதியில் ஏழரை ஏக்கர் காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஸ்டேஷன் பெசேஜ்ஜிலும் ஒன்றரை ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இக்காணிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. வியாபார நிலையங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்கள் இங்கு காணப்படுகின்றன.

அபிவிருத்தி என்ற பெயரால் காணிகளை சுவீகரித்து இந்தியாவின் டாட்டா நிறுவனத்திற்கு அரசாங்கம் விற்பனை செய்வதற்கு திட்டமிட்டிருந்தது. தற்போது தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் எதிர்ப்பையடுத்து டாட்டா நிறுவனம் இத் திட்டத்தைக் கைவிட்டு விட்டது.தற்போது யாருக்கு இக்காணிகள் விற்பனை செய்யப்படப்போகின்றன? உடன்படிக்கையின் விபரம் என்ன? என்பது இரகசியமாகவே உள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள தனியார் காணிகளில் சட்ட ரீதியான உறுதிகளுடன் 150 வருடங்களுக்கு மேலாக மக்கள் வாழ்கின்றனர். அவ்வாறு வாழும் மக்களையே பலாத்காரமாக வெளியேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் இம்மக்களைச் சந்தித்த பாதுகாப்புச் செயலாளர் 3 வருடங்களில் இப்பிரதேசத்திலேயே வீடுகளை அமைத்துக் கொடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

அரசாங்கத்தின் உறுதிமொழிகளை நம்ப மக்கள் தயாரில்லை. அத்தோடு பரம்பரையாக இந்த பிரதேசங்களில் வாழும் தொழில் புரியும் பாடசாலைகள் செல்லும் சமூக கலை கலாசாரத்துடன் இப் பிரதேசங்களில் வாழும் மக்களை அங்கிருந்து வெளியேற்றுவது அம் மக்களின் வாழும் உரிமையைப் பறிக்கும் செயலாகும் என்றார். (அ-2)

# புலி ஆதரவு அமைப்புக்கள் இலங்கைக்கு எதிராக பிரசாரம்

(கொழும்பு)

ஜெனீவாவில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான சில அமைப்புக்கள் இலங்கைக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் குழுவின் 20 ஆம் அமர்வுகள் தற்போது ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றன. நான்கு அமைப்புக்கள் இவ்வாறு வெளிநாட்டுத் தூதுவர்களிடம் இலங்கை தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன.

வடக்கில் தமிழர்கள் கடத்தப்படுவதாகவும் காணிகளை இராணுவத்தினர் கைப்பற்றுவதாகவும் முறைப்பாடு செய்துள்ளனர். இது தொடர்பில் போலியான காணொளி ஒன்றையும் குறித்த அமைப்புக்கள் தயாரித்துள்ளன.

கனடாவிலிருந்து கெரி, ஆனந்தசங்கரி உள்ளிட்ட எட்டு பேரைக் கொண்ட புலி ஆதரவு அமைப்பொன்று ஜெனீவாவில் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் இலங்கை பற்றி முறைப்பாடு செய்துள்ளதாக அவ்வூடகம் குறிப்படுகின்றது.

மனித உரிமை கவுன்ஸில் அமர்வுகளில் கலந்து கொள்ளும் வெளிநாட்டு அமைச்சர்களை சந்தித்து இலங்கை தொடர்பில் விளக்கம் அளிக்க குறித்த அமைப்புக்கள் முயற்சித்து வருவதாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப்பிரதேசம் அராலி,கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம்,இணுவில், மருதனார் மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில்,நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண் டாவில், கோம்பயன் மணல் பிரதேசம்,தட்டாதெரு பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம்,காக்கைதீவு, குருநகர்,பாசையூர் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த வண்ணார்பண்ணைப் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை பிறவுண்வீதி இரண்டாம் ஒழுங்கையிலும் முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை பிறவுண்வீதி முதலாம் ஒழுங்கையிலும் வைத்து வழங்கப்படும். (2-9)


## 1 ஆண்டு நீங்காத நினைவுடன்

செல்வி. வேலன் (செல்வன்) தாட்சாயினி

**அன்னை மடியில்**
**1994.06.16.**

**ஆண்டவன் அரவணைப்பில்**
**2011.06.06.**

சின்னக் குயிலே
சிங்கார தேனமுதே
வண்ணக் குழந்தையாய் - நீ
வளர்ந்த கோலங்கள் -எம்
கண்ணில் நிழலாய் ஆடுதம்மா
மொட்டு மலராகி
மணம் பரப்புவாள் எம் தங்கை
பட்டுச் சேலை கட்டி
பார்ப்போம் அவள் அழகை என
கட்டுக் கட்டாய் ஆசைகளை
காலம் எல்லாம் நாம் சுமந்
தோம்
எம் நெஞ்சில் எட்டி எட்டி நீ
எங்கே சென்றாய் அம்மா
உன் வரவைக் காணாது
உனைத் தேடும் சிறுவர்கட்கு
என்ன பதில் நாம் கூற?
எம் அருமைத் தங்கையே!
எங்களிடம் வந்திடம்மா
அப்பா அம்மா என
அழைத்திடும் குரலோசை
அண்ணா தம்பி என நீ
பாடிடும் எழில் ஓசை இனி
எங்கே கேட்போம்?
ஒரு முறை வந்தெம்மை
உரக்கக் கூப்பிடம்மா
நாம் உம் பின்னே வருகின்
றோம்
உன் பிரிவால் தவிக்கும்




**அம்மா, அப்பா,**
**சகோதரர்கள்**

"வளர்மதி"
கரவெட்டி கிழக்கு.
கரவெட்டி

(சி-309)





## யாழ் மண்ணில்....
## கல்யாணமாலை
## KALYANA MALAI

( சர்வதேச இலவச திருமண சேவை)



இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்)
எனும் முகவரியில் இயங்குகின்றது
பதிவுக்கட்டணம்
ரூ.1000/- மட்டுமே

தொடர்பு:-021 720 1005

அலுவலக நேரம்: வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில்
காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை

குறிப்பு: பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம். திருமணத் தரகர்கள் பதிவு செய்ய முடியாது.

# நில ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் கூட்டமைப்புடன் மு.காங்கிரஸ்ீம் இணையும்



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழத் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வரும் சாத்வீக வழியிலான போராட்டங்களில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொள்ள உள்ளதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

வடக்கைப் போன்று தற்போது கிழக்கிலும் மஹிந்த அரசு திட்டமிட்ட அடிப்படையில் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளதன் காரணமாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இவ்வாறானதொரு அதிரடி முடிவ்வெடுத்துள்ளது என அறிய முடிகின்றது.

கிழக்கில் எமது மக்களின் காணிகள் சுவீகரிப்பது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் அரசிடம் சுட்டிக்காட்டியும் உரிய தீர்வு கிடைக்காததன் காரணமாவே போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

இதுவிடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் விரைவில் முக்கிய பேச்சுகளில் ஈடுபடவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடல் முடிபடைந்த பின்னர் இரு கட்சிகளும் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டங்களை வடக்கு, கிழக்கில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவில் சிகிச்சை பெற்று வரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடு திரும்பிய பின்னர் இரு கட்சிகளும் சந்தித்துப் பேசும் எனவும் நம்பப்படுகிறது. (அ-2)

# மாகாண தேர்தல்கள் ஒரே தினத்தில் நடத்தப்பட வேண்டும்- ஜே.வி.பி.

நாட்டின் சகல மாகாண சபைகளும் கலைக்கப்பட்டு ஒரே தினத்தில் தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

சிலாபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சகல அரச வளங்களையும் துஷ்பிரயோகம் செய்யும் நோக்கில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்மைப்புக் கட்சி இவ்வாறு கட்டம் கட்டமாக தேர்தல் நடத்தி வருகிறது.

ஜே.வி.பி.உள்ளிட்ட ஏனைய அனைத்து கட்சிகளும் தேர்தல்களை புறக்கணிக்க வேண்டுமென்பது தொடர்பில் சகல தரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை பாராளுமன்றத்தையும் அரசாங்கத்தையும் பெறும் இறப்பர் முத்திரையாக மாற்றியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார் என்றார். மேலுமொரு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

இலங்கை தற்போது அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகளுக்கு பொறுப்புக் கூறும் காலனித்துவ நாடாக மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் மாற்றப்பட்டுள்ளது.

மே 22 ஆம் திகதிக்கு பின்னர் இலங்கை தொடர்ந்தும் சுதந்திரமான நாடு அல்ல எனவும் இதற்கு அரசாங்கம் முழுமையாக பொறுப்புக்கூற வேண்டியுள்ளது என்றார். (அ-2)

# கடல் பாதுகாப்பை மீறி எவரும் சட்டவிரோதமாக செல்ல முடியாது

## கடற்படை பேச்சாளர் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையின் கடல் எல்லைக்குள் கடற்படையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் இந்த பாதுகாப்பை மீறி எவரும் இலங்கை கடற்பரப்பில் இருந்து செல்ல முடியாது எனவும் இலங்கை கடற்படையின் பேச்சாளர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் அழைத்துச் செல்லப்பட்ட 200 பேர் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் விபத்துக்குள்ளானது குறித்து கேட்டபோதே அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கை கடற்படையினர் பிராந்தியத்தில் நடைபெறும் சகல நடவடிக்கைகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் இதனால் சட்டவிரோத குடியேற்றவாசிகள் கடற்படையினரை மீறி செல்ல சந்தர்ப்பம் இல்லை.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களில் இலங்கையை சேர்ந்த எவரும் இருக்கவில்லை என்றார். (அ-9)


## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் கைதடி வீதியில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்துடன் இருக்கும் 4 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0775068558

(C-310)

## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கு கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு.

1. கணித ஆசிரியர்
2. விஞ்ஞான ஆசிரியர்கள்

} பட்டதாரி ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

3. கணனி ஆசிரியர்கள்- பட்டதாரிகள், டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள், வெப்சைற் டிசைன் பண்ணக்கூடியவர்கள் (Web designers) விண்ணப்பிக்கலாம்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ள 21 முதல் 65 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.


விண்ணப்ப முடிவுத் திகதி: 05.07.2012

தொடர்புகளுக்கு: தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர்
கிளிநொச்சி

தொலைபேசி இலக்கம்: 0770604950, 0214923118

(C-318)


## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### ஆறாம் திருவிழா

### நயினை நாகபூஷணியே...

நாகபூஷணியே எங்கள் ஓங்கார நாயகியே
நாற்புறமும் கடலால் சூழ்ந்த தேவியே
அகதியாய் வந்தோரை அரவணைத்து
அமுத சுரபியில் அடைக்கலம் கொடுத்தாயே
அமைதியும் எமக்குத்தந்தருளினாயே
அன்னையே எம்மைக் காத்திடம்மா
அகில உலகை ஆளும் அகிலாண்டேஸ்வரியே
அனைத்து இடர்களையும் தீர்த்தருள்வாயே
சிற்பமாய் சிங்கார அழகு சிலையானாய்
சிறப்பான உன்வீடு தங்கக் கோயிலம்மா...
பக்தனாய் உன்னடி பணிந்தோமே- தாயே
பக்தியாய் எம்மிடம் உறைவாய் நீயே....

பா.மதனரூபி
யா/நாகர்கோவில்அ.மி.த.க பாடசாலை

### உலக இயக்கத்தின் அச்சாணி

அடியார்க்கு அருள்கொடு தாயே நாகபூஷணி
நல்வினைகள் வரம் கொடு தாயே மகாவாணி
ஏழ்மை நிலை அழித்திடு தாயே அற்புதவேணி
வாழ்வில்துன்பம் களைந்திடு தாயே புஸ்பவேணி!
நோய் நொடிகள் போக்கிடுவாய் தாயே அம்சவேணி
வாழ்வில் செல்வம் சேர்த்திடுவாய் தாயே கிருஸ்ணவேணி
பொல்லாங்கு நீக்கிடுவாய் தாயே தங்கராணி
யாபேர்க்கும் நலமருள்வாய் தாயே கற்பகவாணி!

ஜெயமைதிலி
கல்வளை

### நாக பூஷணியே போற்றி போற்றி

இன்பங்கள் பரவிட இதயச் சாரலிலே
இனிய வாழ்வு கிடைத்திட
நயினை நாகபூஷணியே போற்றி!
எம்மவர் வாழ்வின் விடிவே போற்றி!
கலைகள் பரவிட கலாசாரம் உயர்ந்திட
பக்தியால் மாந்தர் மனம் மகிழ்ந்திட
நயினை நாகபூஷணியே போற்றி!
எம்மவர் வாழ்வின் விடிவே போற்றி!
மாசு மனம் அழிந்திட எம் குறை தீர்ந்திட
எட்டுத்திக்கும் உன் புகழ் சூழ்ந்திட
நயினை நாகபூஷணியே போற்றி!
எம்மவர் வாழ்வின் வடிவே போற்றி

மு.ஆ.சுமன்
வல்வை


## மைதிலி நகை மாடம்


89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7902



யாழ்.மைதிலி ஜுவலரி
79Z, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
0112396239

# தமிழன் யாரையும் தாழ்த்தமாட்டான்; தாழ்ந்து போக விடவும் மாட்டான்

## கருணாநிதி தெரிவிப்பு



(அண்ணாநகர்)

இலங்கைத் தமிழன் ஆனாலும் இங்குள்ள தமிழன் ஆனாலும் சரி. தமிழன் யாரையும் தாழ்த்தவும் மாட்டான்; தாழ்ந்து போகவும் மாட்டான் என தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஜெயலலிதாவின் அடக்குமுறை ஆட்சியைக் கண்டித்து நேற்று முன்தினம் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்நிழக்வில் கருணாநிதி பேசியதாவது,

தமிழகத்தையும் தமிழக மக்களையும் கலாசாரத்தையும் பண்பாட்டையும் கலையையும் இலக்கியத்தையும் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தையும் அண்ணாவால் உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் அழிந்து விடாமலும் அண்ணா பெரியார் கொள்கைகள் அழிந்து விடாமலும் காப்பாற்ற நிறையப் பணி செய்ய வேண்டியுள்ளது. அதற்கு இந்த ஆட்சி இடையூறாக இருக்கிறது.

அதை கண்டித்தும் எதிர்வரும் ஜுலை மாதம் 4 ஆம் திகதி சிறை நிரப்பும் போராட்டம் தி.மு.கவினர் காந்தியை பின்பற்றுவார்கள், வன்முறையை தவிர்ப்பார்கள், வன்முறை வந்தால் ஏற்க மாட்டோம். எனவே, இந்த போராட்டத்தில் தப்பிப்பதற்காக வன்முறையில் யாராவது ஈடுபட்டால் சிறையில் ஒப்படைப்போம்.

இலங்கைத் தமிழர்களுக்காக இரண்டு முறை மத்திய அரசு, தி.மு.க.ஆட்சியை கலைத்தது. அதில் ஒன்று அமைதிப்படை சென்னைக்கு வரும்போது அது அமளிப்படை என கூறி வரவேற்க போனதால் தி.மு.க.ஆட்சி கலைக்கப்பட்டது.

வீழ்ந்த தமிழர்கள் கண்ணீர் விடாமல் இருப்பதற்காக கடந்த 1990 ஆம் ஆண்டு நானும் நெடுமாறனும் வைகோவும் வீரமணியும் சேர்ந்து டெசோவை உருவாக்கினோம்.

அதை மீண்டும் உருவாக்கியுள்ளோம். அதற்கான மாநாடு ஓகஸ்ட் 5 இல் விழுப்புரத்தில் நடைபெறவுள்ளது. அதில் வெளிநாட்டு அறிஞர்கள், அரசியல்வாதிகள், தமிழக அறிஞர்கள், எனப்பலரும் பங்கேற்கின்றனர். இலங்கைத் தமிழன் ஆனாலும் சரி இங்குள்ள தமிழன் ஆனாலும் சரி. தமிழன் யாரையும் தாழ்த்தவும் மாட்டான்; தாழ்ந்து போகவும் மாட்டான் என கருணாநிதி பேசினார். (2)

# இந்தியா-பாகிஸ்தானிடையே நட்புறவு உருவாக்கப்படும்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை சுமுகமாக அணுகி இந்தியா- பாகிஸ்தான் இடையே நட்பு உருவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாகிஸ்தான் நாட்டின் புதிய பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் கூறியுள்ளார்.

தமது நாட்டின் அயல் நாடுகளான ஆப்கானிஸ்தான், ஈரான், இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் அமைதியான நட்புறவை பலப்படுத்துவேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தானின் புதிய பிரதமராக ராஜா பர்வேஸ் அஷ்ரப் நியமிக்கப்பட்டுள்ளதற்கு இந்திய பிரதமர் மன்மோகன் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

பாகிஸ்தானின் புதிய பிரதமராக பதவி ஏற்றுள்ள உங்களுக்கு இந்தியா சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். உங்களது ஆட்சி காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையே நல்ல நட்புறவு உருவாகி மக்களுக்கு நன்மை ஏற்படும் என நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார். (அ-2)




# இளைஞர்கள் தற்கொலையில் இந்தியாவே முதலிடம் பெற்றது

(புதுடில்லி)

உலகிலேயே இந்தியாவில்தான் இளைஞர்கள் தற்கொலைகள் அதிகம் நடைபெறுவதாக ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆம் ஆண்டுகளில் இருந்ததை விட தற்போது தற்கொலைகள் 3 மடங்கு அதிகரித்துள்ளதாக இந்திய பொது பதிவாளர் தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட மக்களே அதிகளவில் தற்கொலையில் ஈடுபட்டு வந்துள்ளனர். திருமணத் தோல்வியாலே பெரும்பாலான தற்கொலைகள் நடைபெறுவதாகவும் 2010 ஆம் ஆண்டில் மட்டும் ஒரு இலட்சத்து 87 ஆயிரம் பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். கல்வி அறிவு, பணவசதி கொண்ட இளைஞர்களே அதிகளவில் தற்கொலை செய்து கொள்வதாகவும் இவர்களின் வயது 15 முதல் 29 வயதிற்கு உட்பட்டதாகவே உள்ளதாகவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

40 சதவீதம் ஆண்களும் 56 சதவீதம் பெண்களும் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். அதிலும் தென் மாநிலங்களில் தற்கொலை செய்வோரின் எண்ணிக்க்கை 10 மடங்கு அதிகரித்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)

# இலக்குகளை விரைவாகத்தாக்கி அழிக்கும் ஏவுகணை கொள்வனவிற்கு நிதி ஒதுக்கீடு

(புதுடில்லி)

ஏவுகணைகளை வாங்க 20 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு செய்து மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இராணுவத்துக்குத் தேவையான ஏவுகணைகள், ஆயுதங்கள், நவீன கருவிகளை பெறுவதில் அரசு போதிய அக்கறை காட்டவில்லை எனப் புகார் கூறப்பட்டு வரும் நிலையில் அரசு இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.


பாதுகாப்புத்துறையின் கொள்முதல் குழுக் கூட்டம் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இராணுவத்தின் 8 படைப்பிரிவுகளுக்காக தரையிலிருந்து வான் இலக்குகளை விரைவாகத் தாக்கும் ஏவுகணைகளை வாங்க 20 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது. விமானப் படைக்கு சிறிய ரக போர் விமானங்களை வாங்குவதற்கும் நாடு முழுவதும் இராணுவத் தகவல் தொடர்பை மேம்படுத்தவும் கடற்படைக்கு நவீன துப்பாக்கிகள் வாங்குவதற்கும் 8 ஆயிரத்து 500 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விமானப் படையின் தகவல் தொடர்புத் திட்டம் 7 ஆயிரம் கோடி ரூபா செயற்படுத்தப்படும்.

இப்போது பயன்பாட்டில் உள்ள ரஷ்ய தயாரிப்பான குவாட்ராட் ஏவுகணைகளுக்குப் பதிலாக புதிய ஏவுகணைகளை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக உலகளாவிய டெண்டர் கோரப்படும். அமெரிக்காவின் ரேய்தியான், இஸ்ரேலின் ரஃபேல், பிரான்ஸின் எம்.பி.டி.ஏ. ஆகிய நிறுவனங்கள் நவீன ரக ஏவுகணைகளைத் தயாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அதேபோன்ற ஏவுகணைகளை இந்தியாவிலேயே தயாரிக்க பிரான்ஸ் அரசுடன் இணைந்து முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (2)



ஐக்கிய முற்போக்கு கூட்டணி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டி யிடும் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி வெற்றி பெற வேண்டி காங்கிரஸ் கட்சி சார்பில் மேற்கு வங்க மாநிலம் பிர்பூம் மாவட்டத்தில் யாகம் வளர்த்ததைப் படத்தில் காணலாம்.

# பூரி இரத யாத்திரையில் குண்டுவெடிப்பை மேற்கொள்ள தீவிரவாதிகள் திட்டம்

(புதுடில்லி)

ஒடிசாவில் புகழ்பெற்ற பூரி ஜெகன்நாதர் கோவில் இரத யாத்திரை விழா இடம்பெற்று வருகிறது. இதற்காக இலட்சக்கணக்கான மக்கள் பூரியில் திரண்டுள்ளனர்.

பூரி இரத யாத்திரையில் சக்தி வாய்ந்த குண்டுகளை வெடிக்க செய்து மிகப்பெரும் நாசவேலைக்கு பாகிஸ்தானில் இயங்கும் லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் திட்டமிட்டு இருப்பது மத்திய உளவுத் துறைக்கு தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

சமீப காலமாக அசாம் மாநிலத்தில் உள்ள இளைஞர்களை பாகிஸ்தானுக்கு அழைத்து செல்லும் லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் அவர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கி இந்தியாவுக்குள் திருப்பி அனுப்பி வருகிறார்கள். நாசவேலையில் நேரடியாக ஈடுபட முடியாது என்பதால் பாகிஸ்தான் தீவிரவாதிகள் அசாம் இளைஞர்களை தயார்ப்படுத்தியுள்ளனர்.

தற்கொலை தாக்குதல் உட்பட எல்லாவகை நாசவேலைகளிலும் பயிற்சி பெற்ற அசாம் இளைஞர்கள் ஒடிசா மாநிலத்துக்குள் ஊடுருவி இருப்பதாக தெரிகிறது.

தீவிரவாதிகள் சதித்திட்டத்தை முறியடிப்பதற்காக பூரிகோவில் இரத யாத்திரைக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே அடுத்த சில தினங்களில் மும்பையிலும் பயங்கர குண்டு வெடிப்புக்கு பாகிஸ்தான் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

அவர்களது திட்டம் என்ன? தாக்குதல் இடம் எது? என்பன போன்றவை தெரியவில்லை. இதையடுத்து மும்பை நகரில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (அ-2)

# விண்வெளி வீராங்கனை சுனிதா மீண்டும் விண்வெளி மையத்திற்கு

(வோஷிங்டன்)



இந்திய வம்சாவளி அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மீண்டும் சர்வதேச விண்வெளி மையத்துக்கு செல்ல அமெரிக்காவின் நாசா மையத்தினால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவர் எதிர்வரும் ஜுலை மாதம் 14 ஆம் திகதி கஜகஸ்தானில் உள்ள பைகானூர் விண்வெளி தளத்தில் இருந்து புறப்பட்டு செல்கிறார். அவருடன் யூரி மலென் சென்கோ (ரஷ்யா), அதிஹிகோ ஹொசிடு (ஜப்பான்) ஆகியோரும் இணைந்து செல்கின்றனர்.

சுனிதா வில்லியம்ஸ் குஜராத் தந்தைக்கும் ஸ்லோவேனியன் தாய்க்கும் பிறந்தவர். விபத்தில் பலியான கல்பனா சாவ்லாவுக்கு பின்னர் இந்திய வம்சாவளியை சேர்ந்த 2 பெண் விண்வெளி வீராங்கனைகளை அமெரிக்காவின் நாசா விண்வெளிக்கு அனுப்பியது.

அவர்களில் ஒருவர் சுனிதா வில்லியம்ஸ். ஏற்கனவே இவர் அங்கு பயணம் செய்தபோது 195 நாட்கள் த்ங்கி இருந்துள்ளார். 4 தடவை விண்வெளியில் நடந்துள்ளார். அப்போது 29 மணி 12 நிமிட நேரம் செலவழித்துள்ளார் என்ற சாதனைகளை படைத்துள்ளார். (அ-2)

# ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் போது இடையூறு ஏற்படுவது வழமையானதே

## தெல்லிப்பழை விவகாரம் குறித்து கெஹலிய கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கில் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துமளவுக்கு ஜனநாயகம் உறுதி செய்யப்பட்டுள்ளமை குறித்து அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும். புலிகள் இருந்த காலத்தில் இவ்வாறு ஆர்ப்பாட்டங்களை நடத்த முடிந்ததா? என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை பகுதியில் அண்மையில் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணி தடுக்கப்பட்டமை மற்றும் அதற்கு சென்று திரும்பியவர்கள் மீது கல் வீச்சு நடத்தப்பட்டமை குறித்து தகவல் வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஆர்ப்பாட்டங்கள் என்பது நாட்டின் எப்பகுதியிலும் நடைபெறலாம். அதாவது தற்போதைய நிலைமையில் வடக்கில் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துமளவுக்கு ஜனநாயகம் உறுதி செய்யப்பட்டுள்ளமை குறித்து அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

காரணம் புலிகள் இருந்த காலத்தில் இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் நடத்த முடிந்ததா? என்றால் முடியாது என்றே குறிப்பிடவேண்டும்.

ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் போது இடையூறுகள், பிரச்சினைகள் ஏற்படலாம். ஆனால் அடிப்படை விடயத்தை நாம் பார்க்க வேண்டும். வடக்கில் காணி விவகாரம் குறித்து எனக்குத் தெரியாது என்றார். (அ-2)

# போராளிகளை சமூகமயமாக்கல் வெற்றியளிக்கவில்லை- ராஜீவ

(கொழும்பு)

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டதை போல சமூகமயமாக்கல் நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் முன்னாள் விடுதலைப் புலிகளை முறையாக சமூகத்தினுள் சேர்க்கவில்லை. தற்போது 309 முன்னாள் போராளிகள் அரசாங்கத்தின் தடுப்பில் உள்ளனர்.

அரசாங்கத்திடம் சரணடைந்த 11 ஆயிரம் முன்னாள் போராளிகளை ஏ,பி,சி,டி என பல்வேறு குழுக்களாக பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டனர். ஏ மற்றும் பி ஆகிய குழுக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களாவர்.

இதற்கிடையில் 95 சதவீதமான விடுதலைப் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிப்பின் பின்னர் விடுவிக்கப்பட்ட போதும் அவர்கள் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படும்

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்படவுள்ளது.

அண்மையில் 112 இலங்கைப் பிரஜைகளை படகு மூலம் அவுஸ்திரேலியா அழைத்துச் செல்ல முயற்சித்த சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் தொடர்பிலான வழக்கு விசாரணைகளின் போது பொலிஸார் இதனைத் தெரிவித்துள்ளனர்.

ஏழு பேரைக் கொண்ட குழுவினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய குறித்த சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களின் வங்கிக் கணக்குகளை பார்வையிடுவதற்கும் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இதேவேளை சந்தேக நபர்களுக்கு எதிராக குடிவரவு- குடியகல்வு சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர முடியாது எனவும் பிணை வழங்குமாறு சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரியுள்ளனர்.

சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்க அதிகாரம் கிடையாது என கொழும்பு நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

சந்தேக நபர்களை எதிர்வரும் 6 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-2)

2012.06 24

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1314-ஸ்கொட்லாந்துப் படைகள் இரண்டாம் எட்வேர்ட் தலைமையிலான இங்கிலாந்து படையினரை தோற்கடித்தன. ஸ்கொட்லாந்து தனது விடுதலையை மீண்டும் பெற்றது

★1340-நூறாண்டுகள் போர்: மூன்றாம் எட்வேட் தலைமையின் கீழ் இங்கிலாந்து கடற்படையினர் பிரெஞ்சுப் படைகளை முற்றாகத் தோற்கடித்தனர்.

★1509- 8-ம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.

★1571-மணிலா நகரம் அமைக்கப்பட்டது.

★1597-டச்சு கிழக்கிந்திய கம்பனியின் முதலாவது தொகுதியினர் ஜாவாவின் பாண்டாம் நகரை அடைந்தனர்.

★1662-மக்காவு நாட்டைக் கைப்பற்றும் முயற்சியில் டச்சு நாட்டவர் தோல்வி கண்டனர்.

★1664-நியூ ஜேர்சியில் குடியேற்றம் ஆரம்பமானது.

★1812-ரஷ்யாவினுள் ஊடுருவும் முயற்சியில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் நேமன் ஆற்றைக் கடந்தன.

★1849-அமெரிக்கப் பெண்மணியான எலிசபெத் பிளாக்வெல் என்பவரே அமெரிக்காவில் முதன் முதலாக மருத்துவப் பட்டம் பெற்ற பெண்மணியாவார். அவர் இப் பட்டத்தினை 1849 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டார்.

★1860-புளோரன்ஸ் நைட்டிங்கேலின் எண்ணக்கருக்களுக்கமைய முதலாவது தாதிகள் பயிற்சி நிலையம் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டது.

★1932-சியாமில்(தாய்லாந்து) இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து மன்னரின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைந்தன.

★1938 - 450 மெடரிக் தொன் எடையுள்ள விண்கல் பென்சில்வேனியாவின் சிக்கோராவில் வீழ்ந்தது.

★1940-பிரான்ஸும் இத்தாலியும் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.

★1945- 2-ம் உலகப்போர்: நாசி ஜேர்மனியரை வெற்றிகொண்ட சோவியத் படைகளின் வெற்றி அணிவகுப்பு மொஸ்கோவில் இடம்பெற்றது.

★1948-சோவியத் ஒன்றியம் ஜேர்மனியில் தமது கட்டுப்பாட்டிலுள்ள பேர்லினின் மேற்குப் பகுதியுடன் அமெரிக்க, பிரித்தானிய, பிரெஞ்சுக்கள் வசம் இருந்த பகுதிகளுடனான தரை வழித் தொடர்புகளைத் துண்டித்தது.

★1956- சே குவேரா, ஃபிடல் காஸ்ட்ரோ உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டனர்.

★1963-சான்சிபாருக்கு உள்ளக சுயாட்சி வழங்கப்பட்டது

★1975-அமெரிக்க விமானம் நியூயோர்க்கில் வீழ்ந்ததில் 113 பேர் கொல்லப்பட்டனர்.

★1981 -17 ஆண்டுகளாக உலகின் மிக நீளமான தொங்கு பாலமாக இருந்த ஹம்பர் பாலம் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டது.

★1983-அமெரிக்காவின் முதலாவது விண்வெளி வீராங்கனை சாலி ரைட் தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு பூமி திரும்பினார்.

★2004-நியூயோர்க்கில் மரண தண்டனை சட்டபூர்வமற்ற தாக்கப்பட்டது

### பிறப்புக்கள்

★1883-விக்டர் ஹெஸ், நோபல் பரிசு பெற்றவர். (இ.1964)

★1915-ஃபிரெட் ஹாயில், அண்ட வெளி உயிர் மூலாவிகளை ஆராய்ந்த வானியல் அறிவியலாளர் (இ.2001)

★1921-கண்ணதாசன், தமிழ்த் திரைப்பட பாடலாசிரியர், கவிஞர் (இ.1981)

★1928-எம்.எஸ்.விஸ்வநாதன், தென்னிந்திய இசையமைப்பாளர்



புகழ்பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞருமான கண்ணதாசன்(யூன் 24, 1927– ஒக்டோபர் 17,1981) நான்காயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள், நவீனங்கள், கட்டுரைகள் பல எழுதியவர். பல இதழ்களின் ஆசிரியராக இருந்தவர். தமிழக அரசின் அரசவைக் கவிஞராகவும் இருந்த இவர், பள்ளியில் 8-ம் வகுப்புவரையே படித்தார். இவருடன் உடன்பிறந்தோர் 8 பேர். சிறு வயதில் இவரை ஒருவர் 7 ஆயிரம் ரூபாயுக்கு தத்தெடுத்துக் கொண்டார். அவர் வீட்டில் நாராயணன் என்ற பெயரில் வாழ்ந்தார். கண்ணதாசன் 3 திருமணங்கள் செய்ததுடன், அதன்மூலம் 13 குழந்தைகள்பிறந்தன. தனது 54ஆவது வயதில் உடல்நிலை மோசமாகி மரணமானார்.

மிக உயர்ந்த தத்துவங்களை, இலக்கியங்களை எல்லாம் தனது பாடல்கள் மூலம் சாதாரண பாமரனுக்கும் அதைப் புரிய வைத்த அசாத்திய திறமையாளன். அர்த்தமுள்ள இந்துமதம் படைத்த இவரே ஏசுகாவியமும் பாடினார்.

## வடக்கு மக்களின் வாழ்வை மேம்படுத்த நொட்டிங்ஹாம் பல்கலை. முன்வந்தது

(கொழும்பு)

ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பிரித்தானிய நொட்டிங்ஹாம் பல்கலைக்கழக மாணவர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வர உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள காலப் பகுதியில் இவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலாபத்தை ஈட்டக்கூடிய பல்வேறு சுயதொழில் நடவடிக்கைகளுக்கு உரிய கற்பித்தல் மற்றும் பயிற்சிகளை வழங்குவார்கள்.

குறிப்பாக தையல், உணவு உற்பத்தி மற்றும் பதனிடல், கூடை தயாரிப்பு உட்பட பல சுயதொழில் பயிற்சிகளை வழங்குவார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

நொட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் சார்பாக இந்த திட்டத்தை முன்னெடுத்து செல்லும் ஏற்பாட்டாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

இந்த திட்டத்தை விட மேலதிகமாக கணவர்மார்களை இழந்த 70 பெண்களின் பொருளாதார மேம்பாட்டை கருத்தில் கொண்டு செயற்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த குழுவில் சீன மாணவர்கள் உட்பட பல நாட்டவர்களும் அங்கம் வகிக்கும் அதே வேளை இந்த திட்டம்' குறித்து கருத்து தெரிவித்த நிக்கலஸ் றூனி என்ற மாணவர் தாம் பாரிய குறிக்கோளை கருத்திற் கொண்டு இந்த திட்டத்தை வடிவமைத்ததாக தெரிவித்துள்ளார்.

(அ-9)

## கிழக்கு விளையாட்டு விழாவில் இருந்து நிருபர்கள் வெளிநடப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவின் ஏற்பாட்டாளர்களால் அங்கு செய்தி சேகரிக்கச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் தாம் அவமானப்படுத்தப்பட்டதாக கூறி நிகழ்வினை பகிஷ்கரித்து விட்டு குறித்த இடத்திலிருந்து வெளியேறியதாக தெரியவருகின்றது.

கிழக்கு மாகாண விளையாட்டு விழா நேற்று காலை அட்டாளைச் சேனை அஷ்ரப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

இவ்விழாவில் கலந்து கொண்டு அங்கு இடம்பெறும் நிகழ்வுகளை செய்தியாக்குமாறு விழா ஏற்பாட்டாளர்களால் பிரதேச ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் செய்தி சேகரிக்கச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் தமக்கு இடையூறாக இருப்பதாக அங்கிருந்த ஏற்பாட்டாளர்கள் சிலர் தெரிவித்ததோடு இது குறித்து ஒலி பெருக்கியிலும் அறிவித்தனர். இச்சம்பவமானது ஊடகவியலாளர்களை அசௌகரியத்துக்கும் அவமானத்துக்கும் உள்ளாக்கியது.

இதனையடுத்து அங்கு செய்தி சேகரிக்க சென்றிருந்த ஊடகவியலாளர்கள் இது தொடர்பில் தமது அதிருப்தியினை விழாவுக்கு தலைமை வகிக்கும் கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசசபைத் தவிசாளர் ஏ.எல்.எம்.நசீர் ஆகியோரிடம் தெரிவித்து விட்டு அங்கிருந்து வெளியேறினார்கள்.

(அ-9)

## பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டவர்களுக்கு எதிராக சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்

### அமைச்சர் டியூ வலியுறுத்து

(கொழும்பு)

திறந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவிற்கான இரங்கல் உரையின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குற்றச்செயல்களில் ஈடுபட்ட நபர்கள் சுதந்திரமாக திரிவதனை அனுமதிக்கக் கூடாது.

திறந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நபர்கள் சுதந்திரமாக சமூகத்தில் சுற்றித்திரியும் சூழ்நிலை இருந்தால் நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியாது.

இவ்வாறான நட்வடிக்கைகள் குறித்து பாராளுமன்றம் உன்னிப்பாக கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும.

திறந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவர் தொடர்பில் அண்மையில் நீதவான் ஒருவர் விடுத்த பகிரங்க அறிவிப்பு தொடர்பில் பாராளுமன்றம் கவனம் செலுத்த வேண்டியது அவுசியமானது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

(அ-2)



பிரேஸிலின் ரியோடி ஜெனிரோ நகரில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் ரியோ 20 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றுள்ள ஜனாதிபதி மஹி ந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஈரான் ஜனாதிபதி முஹமட் அஹமது நிஜாட்டை சந்தித்து கட்டியணைப்பதை படத்தில் காணலாம்.

## "எனது தரிசனங்கள்" புகைப்படக் கண்காட்சி

பிரான்ஸ் நாட்டின் பிரபல புகைப்படப் பிடிப்பாளரின் வழிப்படுத்தலில் புகைப்படத்தை புதிய முறையில் ஊடகமாகப் பயன்படுத்துதல் தொடர்பான ''எனது தரிசனங்கள்'' புகைப்படக் கண்காட்சி இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் ஒரு மணி வரை ஜும்மா பள்ளிலேனில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

*Allaince France* யாழ்ப்பாணக்கிளை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் இணைந்து நடத்திய புகைப்படத்தை புதிய முறையில் ஊடகமாகப் பயன்படுத்துதல் தொடர்பான புகைப்படக் களப்பயிற்சி கடந்த 21,22,23 ஆம் திகதிகளில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரபல புகைப்படவியலாளர் *DOROTHY SHOES* அவர்களால் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் பங்குபற்றியவர்களால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் காட்சிப்படுத்தப் படவுள்ளன. வழமையாக காட்சிப்படுத்தப் படும் புகைப்படங்களை விட வித்தியாசமான அணுகுமுறையில் அமையப்பெற்ற புகைப் படங்களே காட்சிப்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-9)

## குண்டகசாலையில் விமான நிலையம் அமைக்கும் நோக்கமில்லை - யாப்பா

(கொழும்பு)

குண்டகசாலை விவசாய கல்லூரியையும் விதை உற்பத்தி பண்ணையையும் அகற்றி அங்கு சர்வதேச விமான நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான எத்தகைய நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் 3/2 நிலையியற் கட்டளையின் கீழ் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

100 வருடம் பழைமையான குண்டகசாலை விவசாய கல்லூரியையும் விதை உற்பத்தி பண்ணையையும் அகற்றி அங்கு சர்வதேச விமான நிலையம் அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக அநுரகுமார எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்காக விவசாய திணைக்களத்துக்கு சொந்தமான எந்த காணியையும் சுவீகரிக்க எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. அது தொடர்பில் எதுவித பேச்சுவார்த்தையும் முன்னெடுக்கப்படவில்லை. தவறான தகவலை அநுரகுமார எம்.பி முன்வைத்துள்ளார் என்றார். இதே வேளை, விவசாய தொழில் துறையை மேம்படுத்துவது சம்பந்தமாக அரசாங்கம் காட்டும் அக்கறை குறைவாக இருப்பதாக கூறி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விவசாயம் தொடர்பான ஆலோசகர் ஹேமகுமார நாணயக்கார அந்த பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளார்.

கண்டி குண்டகசாலை விவசாய கல்லூரி, சீதா எலிய கிழங்கு பயிரிடும் நிலம் ஆகியவற்றில் உள்ளூர் விமான நிலையங்களை நிர்மாணிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பது ஒரு தலைப்பட்சமான நடவடிக்கை.

இதன் காரணமாக நாட்டின் விவசாய துறையில் ஏற்பட்டு வரும் அழிவுகளை பார்த்து கொண்டிருக்க முடியாது என்பதால் தனது பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளதுடன் அதற்கான கடிதத்தை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் ஹேமகுமார நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

## பூச்சிகளை வைத்திருந்த தம்பதியினர் கைது

(கொழும்பு)

வெலிகம பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான பூச்சிகளை சேகரித்து வைத்திருந்த செக் குடியரசை சேர்ந்த தம்பதியினரை பொலிஸார் கைது செய்துள்ளனர். குருந்துகஹாதெக்ம நுழைவாயிலுக்கூடாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பிரவேசிக்க முயன்ற போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சந்தேக நபர்கள் இருவரும் எல்பிட்டிய நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இது தொடர்பாக எல்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்துகின்றனர்.

(அ-9)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 167



போர்முனையிலிருந்து திரும்பும் தந்தையை(சோவியத் வீரனை) முத்தமிடும் குழந்தை

மே 9 ஆம் திகதி இரவு 1-வது உக்ரேனிய சேனையின் 3-வது, 4-வது கார்டு டாங்கிப்படைகள் ஜெனரல்கள் ரிபால்கோ, லிலுஷேன்கோவின் தலைமையில் 80 கி.மீ. தூரத்தை முனைப்பான பாய்ச்சலில் கடந்து மே 9-ஆம் திகதி காலை பிரேக் நகரத்தினுள் நுழைந்தன. அதே நாளன்று 2-வது, 4-வது உக்ரேனிய சேனைகளின் முன்னணிப் படைப் பிரிவுகள் பிரேக் நகரத்தை நெருங்கின. கிளர்ந்தெழுந்த பிரேக் நகரத்தின் இராணுவ வலாண்டியர் குழுக்களின் தீவிர உதவியுடன் செஞ்சேனை மே 9 ஆம். திகதி செக்கோஸ்லொவாக்கியத் தலைநகரத்தை முழுமையாக விடுவித்தது. பிரேக் நகர வாசிகளின் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. அதிகாலைப்பொழுதாகியிருந்த போதிலும் எங்கும் மக்கள் கூட்டம் அலை மோதியது. முதியோரும் குழந்தைகளும் இளைஞர்களும் யுவதிகளும் தம்மை விடுவித்த வர்களை மகிழ்ச்சியோடு வர வேற்றனர். "செக்கோஸ்லொவாக்கிய மக்களை விடுவித்த செஞ்சேனை நீடுழி வாழ்க!" என்ற வாழ்த்தொலி எல்லா பக்கங்களிலும் கேட்டது. வீடுகளின் உச்சிகளிலும் பால்கனி களிலும் கோபுரங்களிலும் மூவண்ண செக்கோஸ்லொவாக்கியக் கொடியும் சோவியத் கொடியும் பறக்கவிடப்பட்டன.

சோவியத் துருப்புகள் பிரேக் நகரத்தினுள் காலடி எடுத்து வைத்த நாளாகிய மே 9 ஆம் திகதி செக்கோஸ்லொவாக்கியாவின் தேசிய விழாவாக, விடுதலை நாளாக ஆனது. இந்நாள் நாட்டு மக்களினங்களின் வாழ்வில் ஒரு அடிப்படைத் திருப்பு முனையாக அமைந்தது. இவர்கள் குறுகியகால கட்டத்தில் வாழ்வின் எல்லா துறைகளிலும் முக்கிய புரட்சிகர மாற்றங்களை நிறைவேற்றி சோஷலிச வளர்ச்சிப் பாதையில் உறுதியாக நின்றனர்.

சுற்றிவளைக்கப்பட்ட பாசிச ஜேர்மனியத் துருப்புகள் மே 10-11 இல் எதிர்ப்பை நிறுத்தி ஆயுதங்களைக் கீழேபோட்டன. 60 ஜெனரல்கள் உட்பட சுமார் 86,000 போர்வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் சிறைப்பிடிக்கப்பட்டனர். மேலும் பறிபொருளாக 9,500 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 1,800 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகள், ஏராளமான மற்றவகை ஆயுதங்கள், போர்த்தளவாடங்கள் முதலியன கைப்பற்றப்பட்டன.

650 கி.மீ. நீளப் போர்முனையில் நடைபெற்று ஆறு நாட்கள் நீடித்த பிரேக் நடவடிக்கை செக்கோஸ்லொவாக்கியா முழுவதும் விடுவிக்கப்பட்டதுடன் முடிவடைந்தது. சோவியத் துருப்புகளின் முனைப்பான நடவடிக்கைகள் ஐரோப்பியாவின் மிக அழகிய நகரங்களில் ஒன்றாகிய பிரேக் நகரத்தைக் காப்பாற்றின, நாட்டின் மற்ற நகரங்கள், "கிராமங்களை அழிவிலிருந்தும் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களின் நாசத்திலிருந்தும் மீட்டன. செக்கோஸ்லொவாக்கிய மக்கள் விடுதலையடைந்து, தம் தாயகத்தின் எதிர்காலத்தை தாமே முடிவு செய்யும் வாய்ப்பைப் பெற்றன.

"சோவியத் யூனியனின் பாலும் மனிதகுலத்தைக் காப்பாற்றுவதற்காகவும் எங்களுடைய நகரங்களை விடுவிப்பதற்காகவும் நடந்த கடுமையான போராட்டத்தில் எங்கள் பூமியில் இரத்தம் சிந்திய புகழ்மிகு சோவியத் போர்வீரர்களின் பாலும் எல்லையற்ற அன்புடனும் நன்றியுடனும் எங்கள் மக்கள் இந்த நினைவுநாளை என்றென்றும் எண்ணிப்பார்ப்பார்கள். எங்களை விடுவித்த வெற்றிகர செஞ்சேனையின் பாலான எல்லையற்ற அன்புடனும் நன்றியுடனும் அவர்கள் இந்நாளை நினைவு கூர்வார்கள்" என்று வெற்றித்திரு நாளையொட்டி செக்கோஸ்லொவாக் கிய கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி விடுத்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டப்பட்டிருந்தது.

பிரேக் விடுதலையடைந்தபோது



### செக்கோஸ்லொவாக்கிய மக்களின் மே மாத எழுச்சி

செக்கோஸ்லொவாக்கிய மக்களின் பாசிச எதிர்ப்பு, போராட்ட வரலாற்றில் மிகப்பெரும் பங்கு வகிக்கிறது. எழுச்சியில் பங்கேற்று தேசபக்தர்கள் 1-வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பசின் போர் வீரர்களோடும் கெரில்லாப் படை வீரர்களோடும் சேர்ந்து பாசிஸ்டுகளை முறியடிக்கும் பொது இலட்சியத்திற்கு கணிசமான பங்கைச் செலுத்தினர்.

செக்கோஸ்லொவாக்கியப் பரப்பில் நடந்த சண்டைகளில் சோவியத் துருப்புகள் 122 எதிரி டிவிசன்களை அழித்தன, முறியடித்தன, சிறைபிடித்தன. 12 இலட்சம் எதிரி போர் வீரர்களும் ராணுவ அதிகாரிகளும் சிறைப்பிடிக்கப்பட்டனர். 18,100 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் சுமார் 3200 டாங்கிகளும் 1,900 போர் விமானங்களும் கைப்பற்றப்பட்டன. செக்கோஸ்லொவாக்கியப் பூமியில் நடந்த கடுமையான சண்டைகளில் செஞ்சேனைக்கும் பல இழப்புகள் ஏற்பட்டன. கிட்டத்தட்ட 5 இலட்சம் சோவியத் போர் வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் இங்கு இரத்தம் சிந்தினர், இவர்களில் சுமார் 1 இலட்சத்து 40 ஆயிரம் பேர்கள் இங்கே மீளாத்துயில் கொள்கின்றனர். செக்கோஸ்லொவாக்கியாவின் விடுதலை சர்வதேசியத் தன்மையுடையதாயிருந்தது. இதன் பரப்பில் சோவியத் போர் வீரர்களோடுசேர்ந்து செக்கோஸ்லொவாக்கிய, போலந்து, ருமேனிய யூனிட்டுகளும் போரிட்டன.

(தொடரும்)

## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்

சோவியத்தின்- போர்முனையிலிருந்து இறந்தவர்களை அப்புறப்படுத்துகின்ற புகையிரதம்





போர்முனையிலிருந்து திரும்பும் தந்தையை (ஜேர்மனிய வீரனை) முத்தமிடும் குழந்தை

# இனவாத சக்திகள் வெளியேறாவிட்டால் அரசாங்கம் திடீரென கவிழும் அபாயம்

## விக்ரமபாகு கருணாரட்ன எச்சரிக்கை

(கொழும்பு)

**அரசாங்கத்திலுள்ள சிங்கள பௌத்த இனவாதிகள் வெளியேற்றப்படாவிட்டால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் எந்த நேரத்திலாவது திடீரென கவிழும் அபாயம் உள்ளதாக நவசமசமாஜ கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.**

இது தொடர்பாக நவசமசமாஜக் கட்சியின் தலைவரும் தெஹிவளை-கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசுக்குள்ளேயே அவர்களுக்கு எதிரான சக்திகள் செயற்படுகின்றன. அணைந்து போகவுள்ள விளக்கு பிரகாசமாக எரியும். அதேபோன்றுதான் அரசாங்கத்திலுள்ள இனவாத அமைச்சர்களான சம்பிக்க ரணவக்கவும் விமல் வீரவன்சவும் பிரகாசிக்கின்றனர். விரைவில் இந்தப் பிரகாசம் மறைந்து போய்விடும்.

ஜனாதிபதி தன்னையும் அரசாங்கத்தையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால் இனவாதிகளை வெளியேற்ற வேண்டும். வெகுவிரைவில் இது இடம்பெறும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற ஜனாதிபதிக்கு மனதார விருப்பமில்லை.

ஆனால், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்கா தலைமையிலான நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்காது. அதன்போது ஆட்சியை தொடர முடியாது போகும்.

கியூபாவால் எமக்கு உதவி செய்ய முடியாது. அந்தளவுக்கு அந்நாடு செல்வந்த நாடல்ல. எனவே, மிக விரைவில் அரசிற்குள்ளிருக்கும் இனவாதிகள் வெளியேற்றப்பட்டு பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும் நிலைமை உருவாகும். இவ்வாறான இனவாதிகள் இந்த நாட்டில் தோன்றியமையானது சிங்கள பௌத்த மக்கள் செய்த பாவம்.

அரசுக்குள்ளேயே அரசை கவிழ்க்கும் சதித்திட்டம் தோல்வி அடையாவிட்டால் ஜனாதிபதியின் ஆட்சி பறிபோகும் என்றார்.

(அ-2)

## கட்டுவன இரட்டை கொலையில் ஜூலம்பிட்டி அமரேக்கு தொடர்பு

கட்டுவன துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பிரபல பாதாள உலக தலைவரான ஜூலம்பிட்டி அமரே என்பவர் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போது சாட்சியாளர்கள் நால்வரில் மூவர் ஜூலம்பிட்டி அமரேவை அடையாளம் காண்பித்துள்ளனர்.

இந்நிலையில் மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் இரட்டைக் கொலை சம்பவத்துடன் ஜூலம்பிட்டி அமரே தொடர்புடையவர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(அ-2)

## சுதந்திர ஊடக நிறுவனத்தில் மோசடி புலனாய்வு பிரிவினர் விசாரணை

(கொழும்பு)


சுதந்திர ஊடக நிறுவனத்தில் இடம் பெற்றதாக குறிப்பிடப்படும் ஊழல் மோசடிகள் குறித்து புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளனர். சுதந்திர ஊடக நிறுவனத்தில் பாரியளவு நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அத் தகவலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 2008, 2009 ஆம் நிதியாண்டுகளில் சுமார் 40 மில்லியன் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இல்ங்கை சட்டத்தின் அடிப்படையில் தன்னார்வத்தொண்டு நிறுவன ஆணையாளருக்கு சுதந்திர ஊடக நிறுவனம் ஆண்டுதோறும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதேவேளை, சுதந்திர ஊடக நிறுவனத்தில் கடமையாற்றிய சிலர் உயிர் அச்சுறுத்தலை காரணம் காட்டி நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊழல் மோசடிகளை மூடி மறைக்கும் நோக்கில் இவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது.(அ-2)



கந்தர்மடம் அருள்மிகு செல்வநாகபூஷணி அம்மன் ஆலய கொடியேற்ற நிகழ்வில் அம்பாள் வீதியுலா வருவதை படத்தில் காணலாம்.

# தெரிவுக்குழுவுக்கு வந்தால் ஆறுமாதங்களில் தீர்வுப் பொதியை பெற்றுக் கொள்ளலாம்

## கூட்டமைப்பை அழைக்கிறார் ராஜித



(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து கொள்வதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏன் தயக்கம் காட்டுகின்றது என்று புரியவில்லை. தீர்வுக்காக 60 வருடங்கள் முயற்சித்தவர்கள் 6 மாத செயற்பாட்டில் பங்கு கொள்ள முடியாதா? என்று மீன்பிடி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன கேள்வி யெழுப்பினார்.

தேசிய பிரச்சினை குறித்து அரசியல் தீர்வுக்கான இணக்கப்பாட்டை எட்டும் நோக்கில் அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தற்போதைய நிலைமை குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவானது அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள நிலையிலும் எதிர்க்கட்சிகள் அதில் பங்கேற்காததன் காரணமாக அதன் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாமல் உள்ளது. குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்காமல் தொடர்ந்து தாமதித்து வருகின்றது.

பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு தமது பிரதிநிதிகளின் பெயர்களை வழங்குமாறு சபாநாயகர் அறிவித்துவிட்டார். எனினும் கூட்டமைப்பு இதுவரை தீர்மானம் எடுக்காமல் இருக்கின்றது. என்னைப் பொறுத்த வரையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக்குழுவில் நம்பிக்கையுடன் இணைந்து கொள்ளலாம் என்பதையே வலியுறுத்திக் கூறுகின்றேன்.

காரணம் ஆறு மாதங்களில் தீர்வுத்திட்டம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எந்த சந்தேகமுமின்றி அதில் ஈடுபடலாம். அதாவது அரசியல் தீர்வுக்காக 60 வருடங்களாக காத்திருந்தவர்களுக்கு 6 மாதங்கள் காத்திருக்க முடியாதா என்பதே எனது கேள்வியாகவுள்ளது.

மேலும் தெரிவுக்குழுவில் சகல கட்சிகளும் இணைந்து கொள்வதன் மூலம் அனைத்து விவகாரங்கள் குறித்தும் பேசலாம். 13 பிளஸ் மற்றும் காணி பொலிஸ் அதிகாரங்கள் என எழுகின்ற அனைத்து விடயங்கள் குறித்து பேச்சு நடத்தலாம்.

கட்சிகளுக்கு இடையில் கலந்துரையாடும் பொருட்டே பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்படுகின்றது. எனவே, பேச்சு நடத்தலாம். அதேநேரம் இந்த தெரிவுக்குழு ஊடாக தீர்வு என்பது சாத்தியமில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை.

உதாரணமாக சர்வகட்சி பிரதிநிதிகள் குழு பாராளுமன்றத்தின் ஒரு அங்கமாக இருக்கவில்லை. ஆனால், தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவானது பாராளுமன்றத்தின் ஒரு அங்கமாகும்.

எனவே, பாராளுமன்றத்தின் மீது நம்பிக்கை வைப்பவர்கள் அரசியல் தீர்வு குறித்து ஆராயும் தெரிவுக்குழுவிலும் நம்பிக்கை வைக்கலாம் என்பதனை வலியுறுத்துகின்ற அதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு தனது பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கையும் விடுக்கின்றேன் என்றார்.

(அ-2)

# பொதுமக்களின் காணி, கட்டடங்களை அவர்களிடமே ஒப்படையுங்கள்



## அமைச்சர் றிசாத் அறிக்கை

(கொழும்பு)

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையினையடுத்து பொது மக்களின் காணிகளினை பயன்படுத்தும் பாதுகாப்பு தரப்பினர் அவற்றை அம் மக்களின் பாவனைக்கு மீள ஒப்படைக்க வேண்டும் என்று கைத்தொழில், வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

கடந்த 30 வருட கால யுத்தம் நடைபெற்று தற்போது சமாதான சூழல் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் வடக்கிலும் கிழக்கிலும் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தற்போது தமது சொந்த பிரதேசங்களை நோக்கி மீள்குடியேற்றத்திற்காக வருகைத் தரும் இந்த நிலையில் அன்று தேவையேற்பட்டதால் இப் பொதுமக்களின் காணிகள் மற்றும் கட்டடங்கள் என்பன பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தன.

ஆனால், தற்போது நாட்டில் அச்சமற்ற சூழல் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்களின் காணிகள் அவர்களது பயன்பாடுகளுக்காக மக்களிடம் கையளிக்க வேண்டும். இது தொடர்பில் தமது கட்சி உரிய தரப்பினரிடத்தில் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இவ்வாறான காணிப் பிரச்சினை தொடர்பாக உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு தேவையான விபரங்களை திரட்டுவதற்காக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

அதேபோல் வன்னி மாவட்டத்தில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இவ்வாறான பொதுமக்கள் காணிகள் குறித்து கண்டறிந்து உரிய அறிக்கை சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளில் பாதுகாப்பு படையினர் நிலை கொண்டிருப்பது குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு தமது கட்சி ஏற்கனவே கொண்டு வந்துள்ளதுடன் அதனை மக்களிடம் கையளிக்க வேண்டும் என்ற வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.

வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் அம்மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்பதில் தமது கட்சியான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுதியாக இருப்பதால் அதனை அம்மக்கள் பெற்றுக் கொள்வதற்கு தேவையான அனைத்து செயற்பாடுகளையும் தாம் முன்னெடுத்துள்ளதாகவும் அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## குற்றச் செயல்கள் தொடர்பில் சபையில் 6 ஆம் திகதி விவாதம்

(கொழும்பு)

நாட்டில் அதிகளவிலான குற்றச் செயல்கள் இடம்பெறுகின்ற நிலையில் அவை குறித்து எதிர்வரும் ஆறாம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் விவாதிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இணங்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. மூன்று மணித்தியால ஒத்திவைக்கப்பட்ட விவாதமாக இது இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் ஒத்திவைப்பு விவாத பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க ஜே.வி.பி.கோரி இருந்தபோதும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். எனினும் பின்னர் அவர்களும் இணங்கிக் கொண்டதற்கு அமைய இந்த விவாதம் ஆறாம் திகதி இடம் பெறவுள்ளது.

கட்டுவெனவில் ஜே.வி.பி. நடத்திய கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து இந்த விவாதம் குறித்து வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட கோழிப்பண்ணை நிறுவனமொன்றினால் இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனிலிருந்து 15 மில்லியன் ரூபா பெறுமதியான வாசனைத் திரவியங்கள், சப்பாத்துக்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதைப் படத்தில் காணலாம்.

## ஜே/157 பிரிவு கிராமத்தில் மக்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்கு உட்பட்ட அந்திரான் கிராமத்தின் ஜே./157 கிராம சேவகர் பிரிவு மக்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வட்டு. கிழக்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளதாக சனசமூக நிலையத் தலைவர் இ.கஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் புதிய வீட்டுத் திட்டம், திருத்த வேலை வீட்டுத்திட்டம், புதிய மலசலகூடத்திட்டம், திருத்த வேலை மலசலகூடத்திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதால் அக்கிராம மக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதில் வட்டுக்கோட்டை உப அலுவலகப் பொறுப்பதிகாரி, காணி பெயர் மாற்றம், சோலைவரி அதிகார சபைச் செயலாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-9)

## வீரகத்தி விநாயகருக்கு புதிய தண்ணீர் தாங்கி

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இதன் முதற்கட்ட வேலையாக கடந்த 21 ஆம் திகதி வியாழக்கிழமை அப்பகுதி மக்களால் அடிக்கல் நாட்டும் நிகழ்வு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-8)

# மனித உரிமை ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராக 125 முறைப்பாடுகள் பதிவாகின

## ஆணைக்குழுவின் தலைவர் தகவல்

(கொழும்பு)

பொலிஸாருக்கு எதிராக அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரதாபா மஹானாம ஹேவா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆறு மாதங்களில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் அதிகளவான முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிரானவை.

கடந்த ஆறு மாதங்களில் அரசாங்கத் துறைகளுக்கு எதிராக 170 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் 125 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிரானவையாகவுள்ளன.

பொலிஸார், படையினர், அரசாங்க அதிகாரிகள், மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட அரசாங்க ஊழியர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது இந்த ஆண்டில் முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. சித்திரவதைச் சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு பாரிய குற்றச்சாட்டுக்களும் இதில் அடங்குகின்றன.

அதிகளவான குற்றச்சாட்டுக்கள் அவதூறு செய்தல், சிறியளவிலான சித்திரவதைகள் போன்றன தொடர்பிலானவை. குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்து பரிந்துரைகளை முன்வைக்க முடியுமே தவிர அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட முடியாது.

சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தமக்குக் கிடையாது என தெரிவித்துள்ளது. இதே வேளை, இவ்விடயம் குறித்து பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கருத்து வெளியிடுகையில், பொலிஸார் வன்முறைகளில் ஈடுபடவில்லை.

கலகங்களை அடக்கும்போது கூட வன்முறை வழிகளைப் பின்பற்ற வேண்டாம் என பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு எதிரான சகல முறைப்பாடுகளையும் சித்திரவதைச் சம்பவங்களாக கருத்தப்பட முடியாது என்றார்.

இராணுவப் பேச்சாளர் ருவான் வனிகசூரிய கருத்து வெளியிடுகையில், இராணுவத்தினர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சித்திரவதைகளை மேற்கொள்வதில்லை. எந்தவொரு விசாரணைகளின் போதும் சித்திரவதைகள் இடம்பெறுவதில்லை. மேலும் குற்றச் செயல்களில் ஈடுபடும் படையினருக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (அ-2)

# தொடரும் கொக்கிளாய் நில அபகரிப்பு

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று, பிரதேச செயலகப் பிரிவிற்கும் முள்ளியவளை கிராம சேவையாளர் பிரிவிற்கும் உட்பட்ட கொக்கிளாய் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் இராணுவத்தினராலும் அரச ஆதரவு கட்சிகளின் அரசியல் தலைவர்களினாலும் திட்டமிட்ட முறையில் சிங்கள குடியேற்றமும் பௌத்த விகாரைகள் நிறுவுதல் மற்றும் பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்தல் போன்ற நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருவதாக கிராம வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அங்கு நேரடியாக சென்ற செய்தியாளர் அங்குள்ள மக்களை சந்தித்துத் திரட்டிய தகவல்கள் வருமாறு:

மூன்று தலைமுறைகளுக்கு முன் தட்டாமலை பகுதியிலிருந்த வன்னி ஆதி இனத்தை சேர்ந்த தமிழ் மூதாதையர்களே முதன் முதலாக இற்றைக்கு 300 ஆண்டுகளாக கொக்கிளாய் கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். அதற்குப்பின் யாழ்ப்பாணத்திலிருந்து வியாபார நோக்கோடும் மீன்பிடித் தொழிலுக்காகவும் கொக்கிளாய் கரையோரங்களில் யாழ்ப்பாணத் தமிழர்களும் வந்ததோடு, முற்றுமுழுதாக தமிழ் மக்களே இந்தப் பகுதியில் வாழ்ந்து வந்தனர்.

அதன்பின் 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 21 சிங்களக் குடும்பங்களே மீன்பிடித் தொழிலுக்காக கரையோரங்களில் கூடாரம் அமைத்து தற்காலிகமாக தங்கியிருந்து தொழில் செய்து வந்தனர். மீன்பிடி பருவ காலம் முடிவடைந்தபின் சொந்த இடத்திற்கு சென்று விடுவார்கள்.

தொடர்ந்து 1983-1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்களவர் தமிழர்கள் மீதான இனப்படுகொலையை கட்டவிழ்த்துவிட்ட காலப்பகுதியில் சிங்களவர், கொக்கிளாய் கிழக்கு மேற்கு பகுதிகளில் இருந்த தமிழ் மக்களின் வீடு மற்றும் பயிர் நிலங்கள் போன்றவற்றை நாசம் செய்ததன் காரணத்தினாலும் அந்தக் காலப்பகுதியில் முல்லைத்தீவு அரச அதிபராக இருந்தவர் 24 மணி நேரத்திற்குள் கொக்கிளாய் பகுதியிலிருந்து தமிழ்மக்கள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டதை அடுத்து 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அனைத்து மக்களும் இடம்பெயர்ந்து குமுளமுனை, அளம்வில், வற்றாப்பளை, முல்லைத்தீவு, சின்னத்தங்காடு, செல்வபுரம் போன்ற பகுதிகளில் உறவினர்களின் காணிகளிலும் பொதுக் காணிகளிலும் தங்கியிருந்து கூலிவேலை செய்து வாழ்ந்து வந்தனர்.

**திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம்**

1984-ல் தமிழர்கள் கொக்கிளாய்ப் பகுதியிலிருந்து முற்றுமுழுதாக வெளியேற்றப்பட்டதோடு அப்பகுதி பூரண இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளாக்கப்பட்டு தெற்கில் வசதி வாய்ப்புகளுடன், சொத்து சுகங்களுடன் வாழ்ந்து வந்த சுமார் 120 குடும்பங்களைச்சேர்ந்த சிங்கள மக்கள் கொக்கிளாய் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் கொண்டு வந்து குடியேற்றப்பட்டனர். கொக்கிளாய் கொக்குத்தொடுவாய் கருநாட்டான்கேணி போன்ற இடங்களில் இராணுவ நிலைகள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் 1990 களில் தாக்கியபோதும் அவர்கள் முகத்துவாரத்தை நெருங்கவில்லை. கொக்கிளாய் முகத்துவாரத்தில் தொடர்ந்தும் இராணுவத்தினரால் பாதுகாப்பளிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றம் வளர்க்கப்பட்டு வந்தது. கடந்த 26 வருடங்களாக இராணுவத்தினரால் தமிழர்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. கொக்கிளாய் வள நிலப்பகுதி விவசாய நிலமும் மீன்பிடி ஆறும் நிறைந்த குளமும் எல்லாவற்றையும் விட மீன்பிடி வளம் நிறைந்த கடல் பிரதேசத்தையும் கொண்டது.

இவ்வாறு வளம்மிக்க நிலத்தையே 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே இராணுவத்தினரால் குறிவைக்கப்பட்டு தமிழர்களை வெளியேற்றிவிட்டு அன்றைய காலப்பகுதியிலேயே சிங்களக் குடியேற்றத்திற்கு அத்திவாரமிடப்பட்டது.

மீன்பிடியின் மூலம் சொத்துகளைச் சேர்க்கலாம் என்ற பரப்புரையின் அடிப்படையில் தெற்கிலிருந்து பல சிங்களவர் குடும்பமாக வந்து குடியேறி தொழிலில் ஈடுபட்டு வளங்களை அள்ளிச்செல்லதொடங்கினர். இன்று எந்த தடங்கலும் இன்றி அவர்கள் கொக்கிளாயின் வளங்களை அள்ளிச் செல்கின்றார்கள். 26.06.2011 அன்று கொக்கிளாய் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் அரசினால் நிரந்தரமாகக் காணிகள் வழங்கப்பட்டு 33 குடும்பங்களைச் சேர்ந்த சிங்கள மக்கள் கொக்கிளாய் பிரதேச மக்களாக அவர்கள் கருதப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து படிப்படியாக குடியேற்றப்பட்டு 170 சிங்களக் குடும்பங்கள் வரை பதிவு செய்யப்பட்டு நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றனர்.

கொக்கிளாய் பகுதியில் பதிவு செய்தும் பதிவு செய்யாமலும் மொத்தமாக 350 சிங்களக் குடும்பங்கள் வரை குடியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிங்கள மக்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு குடியேற்றத்திற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். அத்தோடு முகத்துவாரத்தில் அவர்கள் வணங்குவதற்கு புத்தர் கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

15 சிங்கள மாணவர்களுக்காக நான்கு இரட்டை மாடிக்கட்டங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மின்சார வசதி போக்குவரத்து வசதி என்பன செய்து கொடுக்கப்பட்டுள்ளன. புல்மோட்டை வழியாக செல்வதற்கு தரை வழிப்பாதை இல்லாததனால், கடல் வழியாக சென்றுவர படகு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

2011 ஆம் ஆண்டு 12 ஆம் மாத காலப்பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட தமிழர்களின் நிலை இதற்கு முற்றிலும் எதிராக இருக்கிறது; கொக்கிளாயில் குடியேற்றப்பட்ட அந்த நிலத்தில் பூர்வீக தமிழர்களின் நிலைமை, ஒடுக்குமுறை நோக்கோடு புறக்கணிக்கப்பட்டு வருகிறது. அடிப்படை வசதிகள் இல்லாமல் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

முல்லைத்தீவு நகரத்துக்கு போக்குவரத்து வசதிகள் சிறந்த முறையில் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. ஒருசில பேருந்துகளை நம்பியிருக்கிறார்கள்.

## எங்கள் நிலம் எமக்கு வேண்டும்!



சுமார் 100 மாணவர்கள் படிக்கிற கொக்கிளாய் பாடசாலை ஒரே ஒரு ஓலையால் அமைக்கப்பட்ட தற்காலிக கட்டடத்தில் இயங்குகிறது. வீதி திருத்தப்படாமலும் மணலும் பற்றையுமாகக் காணப்படுகிறது.

ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமூகமளிப்பது குறைவாகக் காணப்படுகிறது. கல்வி நடவடிக்கைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு முதலாம் மாத காலப்பகுதியிலேயே ஒரே ஒரு நிரந்தரப் பாடசாலைக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. கொக்கிளாயில் தமிழர்களின் பூர்வீக நிலம் அபகரிக்கப்பட்டு சிங்கள மக்கள் அந்த நிலத்தின் புர்வீக மக்களாக பொறிக்கப்பட்டுள்ளார்கள். இது ஒட்டு மொத்தமாக ஈழத் தமிழினத்தின் சந்ததிகளையும் அபாயம் மிக்க எதிர்காலத்திற்கு முகங்கொடுக்க வைக்கப்போகின்றது.

தாய் மண் விடுதலைக்காய் போராடி அளப்பெரிய தியாகங்களைச் செய்து விடுதலை கேட்டுநின்ற இனத்தின்மீது மாபெரும் அழிப்பை நடத்தி ஒரு சில ஆண்டுகளிலேயே இப்படி சிங்களக் குடியேற்றங்களைச் செய்யும் பேரினவாத அரசு, இப்போது புதுக்கதை எழுதுகிறது என்றால், எதிர்காலத்தில் எப்படி நடந்துகொள்ளப் போகின்றது? என்றும் அதனால் எதிர்காலச் சந்ததி எப்படி தவிக்கப்போகின்றது? என்றும் பெரும் அச்சம் எழுகின்றது.

கொக்கிளாயில் நடந்து வருவது வெறும் நில ஆக்கிரமிப்பு, உரிமைகள் பறிக்கும் அரசியல் நடவடிக்கை அல்ல. ஈழத்தமிழினத்தை நிலத்திலிருந்து துடைத்தெறியும் இன அழிப்பு நடவடிக்கையாகவும்; ஈழத்தமிழர்களின் பண்டைய அடையாளங்களையும் அழித்தொழிக்கும் பெரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே கொள்ள வேண்டியுள்ளது.

சமீபகாலப் பகுதியிலே, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினால் அரை நிரந்தர தற்காலிக வீடு அமைப்பதற்கு உதவி செய்தனர். அந்த நிறுவனத்தினாலேயே வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது. விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களும் தெரிவுசெய்யப்பட்ட பயிர் விதைகளும் வழங்கப்பட்டது. கடற்தொழில் செய்பவர்களுக்கு வலை படகு போன்ற வாழ்வாதார உதவிகளை வழங்கினர். அத்தோடு .என்.ஆர்.சி நிறுவனத்தினாலும் 110 அரைநிரந்தர வீடு அமைப்பதற்கான உதவி வழங்கப்பட்டு வருகின்றது. பொதுமக்களின் காணிகளில் பௌத்த விகாரை நிறுவுதல் ஈழத்தமிழர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பூர்வீக இடங்களில் ஒன்றாகவும் இயற்கை எழில் மிக்க இடங்களில் ஒன்றாவும் திகழும் கொக்கிளாயில் இந்து ஆலயங்களுக்குப் பதிலாக பௌத்த விகாரைகள் அதிகமாகத் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றது.

கொக்கிளாய் வைத்தியசாலை கொக்கிளாய் பாடசாலை விளையாட்டு மைதானம் உபதபாலகம் ஆகியவற்றை உள்ளடக்கி பொதுமக்களுக்கு சொந்தமான 15 ஏக்கர் விஸ்தீரண முடைய காணியில் தென்னிலங்கையி லிருந்து வருகை தந்த பௌத்த மதகுரு ஒருவரால் மீள்குடியேற்ற காலத்திற்கு முன்னரே சிறிய அளவிலான புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டு இராணுவத்தினரின் ஆதரவுடன் ஆக்கிரமிக்கப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத காலப்பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட தமிழர்கள் தமது காணியை பௌத்த பிக்கு ஆக்கிரமித்து வைத்திருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்து தமது காணியை தமக்கே தரும்படி 2011 டிசெம்பர் மாத காலப்பகுதியிலேயே முல்லைத்தீவு உதவி அரச அதிபரிடம் முறைப்பாடு செய்தும் எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை.

அதன்பின் குறித்த 15 ஏக்கர் பரப்புடைய காணியை ஆக்கிரமித்திருந்த பௌத்த பிக்கு இராணுவத்தினரின் உதவியுடன் காணியை சுற்றி மரக்குற்றிகளை நாட்டி வேலியை அமைத்திருந்தார். தொடர்ந்து கொக்கிளாய் கிராம வாசிகள் -பௌத்த பிக்குவினால் ஆக்கிரமிக்கப்பட்ட- காணிக்குள் சென்று தத்தம் காணிகளைச்சுற்றி வேலி அமைத்தனர். அச்சமயம் பௌத்த பிக்கு இராணுவத்தினரின் உதவியுடன் பொதுமக்களின் வேலிகளைப் பிடுங்கி எறிந்து அச்சுறுத்தினார். இந்த செயற்பாட்டிற்கு அப்போதிருந்த முல்லைத்தீவு அரச அதிபரும் உடந்தை என்று பொதுமக்கள் கூறினர். பொதுமக்கள் ஒன்றிணைந்து பௌத்த பிக்குவை எதிர்த்து மீண்டும் மீண்டும் தத்தம் காணிக்குள் வேலி அமைத்தனர். அதன் பின் முல்லைத்தீவு அரச அதிபர் இடம் மாற்றப்பட்டதைத் தொடர்ந்து பௌத்த பிக்குவின் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளது. இருப்பினும் தமது காணிகளை பௌத்த மதகுருவிடமிருந்து மீட்டுத் தருமாறு கிராம வாசிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

**இலமனைற் தொழிற்சாலை நிறுவுதல்**

குறிப்பாக கடந்த 03-04-2012 திகதிக்கும் 05-04-2012 திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கொக்கிளாய் கிழக்கு பகுதியில் 25 குடும்பங்களின் 35 ஏக்கர் நிலப்பரப்பு இல்மனைற் தொழிற்சாலை அமைப்பதற்காக கனிய வள அமைச்சினால் சுவீகரிக்கப்பட்டு அந்த 35 ஏக்கர் நிலப்பரப்பையும் சுற்றி மரக்குற்றிகளை எல்லையாக நாட்டி, பெயர் பலகையும் நாட்டப்பட்டுள்ளது. அப்பகுதிக்குள் எவரும் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அதற்கு அப்பகுதியைச் சேர்ந்த இராணுவத்தினர் பாதுகாப்பாகவும் பக்கபலமாகவும் நிற்கின்றனர்.

கனிய வள அமைச்சினால் சுவீகரிக்கப்பட்டுள்ள இந்த 35 ஏக்கர் வயல் நிலத்தை நம்பி வாழ்க்கை நடாத்தும் 25 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 105 பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர். கனியவள அமைச்சினால் சுவீகரிக்கப்பட்ட 35 ஏக்கர் காணிக்கு உரிய ஆவணங்கள், குறித்த பகுதியைச் சேர்ந்த காணி உரிமையாளர்களிடமே உள்ளது.

கள அறிக்கை ரூபன்
நன்றி இணையம்

# பூநகரி கோட்டத்தின் ஆங்கில மொழி தின போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

(சிவநகர்)

பூநகரி கோட்டத்தில் நடைபெற்ற ஆங்கில தினப்போட்டி முடிபுகளை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**உறுப்பெழுத்து**

**தரம் -03**

ஏ.லதீசன் (கிளி/ஜெயபுரம் ம.வி), வை. யதுசன் (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), எஸ்.பவித்திரன் (கிளி/ஜெயபுரம் ம.வி)

**தரம் -04**

எஸ்.டிலுக்சி (கிளி/முழங்காவில் ஆ.வி), கே.சாலினி (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), யு.யதுர்சிகா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா)

**தரம்-05**

என்.நர்மதா (கிளி/முழங்காவில் ஆ.வி), ஏ.கரிஸ்மாதேவி (கிளி/கறுக்காய்தீவு ம.வி), கே.கனிமதி (கிளி/பூநகரி ம.வி)

**தரம்-06**

வி.மதுசா (கிளி/வேரவில் இந்து ம.வி), எஸ்.இந்துசா (கிளி/முழங்காவில் ம.வி), எஸ். கோபிகா (கிளி/ஜெயபுரம் ம.வி)

**தரம்-07**

என்.அனோஜா (கிளி/முழங்காவில் ம.வி), கே. நிசாந்தினி (கிளி/செல்லையாத்தீவு அ.த.க.பா),ஐ.பதீபா (கிளி/முழங்காவில் ம.வி)

**தரம்-08**

கே.ஜெனுஷா(கிளி/கரியாலை நாகபடுவான் இல.02),பி.ஹிந்துஜா (கிளி/முழங்காவில் ம.வி),ரி.நிரோஜினி (கிளி/செல்லையாத்தீவு அ.த.க.பா)

**தரம்-09**

எஸ்.டிலக்ஷனா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா),பி. சர்மிளா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா),வை. மேரியனிஸ்ரா (கிளி/குமுழமுனை அ.த.க.பா)

**தரம் -10**

கே.சிந்துஜா (கிளி/பூநகரி ம.வி), யு.நிதர்சன் (கிளி/பூநகரி ம.வி),ஆர்.ஜிந்துசா (கிளி/ஜெயபுரம் ம.வி)

**தரம்-11**

கே.துர்க்கா (கிளி/கறுக்காய்தீவு ம.வி), ரி.தனுஜா (கிளி/ஜெயபுரம் ம.வி), எஸ்.தட்சாயினி (கிளி/பூநகரி ம.வி)

**தரம்-12**

ஜே.தர்மிகா (கிளி/முழங்காவில் ம.வி), எஸ்.கஜிந்தா (கிளி/பூநகரி ம.வி)

**தரம் -13**

கே.ரம்சியா (கிளி/பூநகரி ம.வி),என்.ரேவதி (கிளி/முழங்காவில் ம.வி),ஆர்.யுலக்சினி (கிளி/ஜெயபுரம் ம.வி)

**சொல்வதெழுதுதல்**

**தரம்-06**

ஜே.பவித்திரன் (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா),ஜி.அருண்யா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), எஸ்.திவ்யா (கிளி/முழங்காவில் ம.வி)

**தரம்-07**

எஸ்.சுஜிந்தா (கிளி/ஞானிமடம் அ.த.க.பா), எ.கலையரசன் (கிளி/ வேரவில் ம.வி), ஜி.அசானி (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), ரி.நிதர்சன் (கிளி/ஜெயபுரம் ம.வி)

**தரம்-08**

எஸ்.மதுவர்தினி (கிளி/முழங்காவில் ம.வி), வி.பார்த்தீபன் (கிளி/ஞானிமடம் அ.த.க.பா), ஆர்.வித்தியா (கிளி/முழங்காவில் ம.வி)

**தரம்- 09**

எஸ்.மோனிஷா (கிளி/பூநகரி ம.வி), ஜே.ரம்யா (கிளி/முழங்காவில் ம.வி), வி.லக்சிகா (கிளி/ நல்லூர் ம.வி)

**தரம்-10**

ஆர்.ஜான்றொக்சன் (கிளி/வேரவில் ம.வி), எஸ்.கிருஷாந்தி (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), எஸ்.பிருந்தா (கிளி/முழங்காவில் ம.வி)

**தரம்- 11**

கே.துர்க்கா (கிளி/கறுக்காய்தீவு ம.வி) , எஸ்.அருணன் (கிளி/பூநகரி ம.வி), எஸ். நிஷாளினி (கிளி/பூநகரி ம.வி)

**தரம்-12**

பி.துவாரபாலகி (கிளி/பூநகரி ம.வி), பி. கேதீஸ்வரி (கிளி/முழங்காவில் ம.வி)

**தரம்-13**

எஸ்.சுகன்யா (கிளி/பூநகரி ம.வி), எஸ். பிரியதர்சினி (கிளி/ஜெயபுரம் ம.வி), ஜே. பௌஸ்ரினா (கிளி/வேரவில் ம.வி)

**பாவோதல்**

**தரம்-03**

எஸ்.பிரியங்கா (கிளி/ஜெயபுரம் ம.வி), எம்.மௌசிகா (கிளி/ஜெயபுரம் ம.வி),ஜே.மேரி கொலின்சினி (கிளி/வலைப்பாடு றோ.க.த.க.பா)

**தரம்-04**

என்.நஸ்ரின் (கிளி/நாச்சிக்குடா அ.மு.ம.வி), வி.கினித்தா (கிளி/ஜெயபுரம் ம.வி), எ.சஜிராம் (கிளி/ நல்லூர் ம.வி)

**தரம்-05**

என்.நிஸ்ரான் (கிளி/நாச்சிக்குடா அ.மு.ம.வி), வி.கஜதீபா (கிளி/முழங்காவில் ஆ.வி), ரி.கௌசலா (கிளி/ஜெயபுரம் ம.வி)

**தரம்-06**

ஜி.அருண்யா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), எஸ்.திவ்யா (கிளி/முழங்காவில் ம.வி), ஜே.தர்சினி (கிளி/பூநகரி ம.வி)

**தரம்-07**

யு.ஜொசானி (கிளி/வேரவில் ம.வி), ஜி. ஆசனி (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), ஐ.பதீபா (கிளி/முழங்காவில் ம.வி)

**தரம்-08**

எ.சரண்யா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), வி.வினுசியா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா),எ.தரணிகா(கிளி/ஜெயபுரம் ம.வி)

**தரம்-09**

ஆர்.றிவ்னா (கிளி/நாச்சிக்குடா அ.மு.ம.வி), ரி.தக்மினா (கிளி/நாச்சிக்குடா அ.மு.ம.வி), ஜெ.ரம்யா (கிளி/முழங்காவில் ம.வி)

**தரம்-10**

எஸ்.மேனகா (கிளி/முழங்காவில் ம.வி), எஸ்.பிருந்தா (கிளி/முழங்காவில் ம.வி), எம். மஹிரா (கிளி/நாச்சிக்குடா அ.மு.ம.வி)

**தரம்-11**

கே.சஜீந்தினி (கிளி/முக்கொம்பன் அ.த. க.பா), எஸ்.வாசுகி (கிளி/ஜெயபுரம் ம.வி), என். டஸ்னாகினி(கிளி/நாச்சிக்குடா அ.மு. ம.வி)

**முன்னாயத்தம் செய்து உரை நிகழ்த்துதல்**

**தரம்-12**

பி.துவாரபாலகி (கிளி/பூநகரி ம.வி)

**தரம்-13**

எஸ்.சுகன்யா (கிளி/பூநகரி ம.வி), ஈ. சுவஸ்திகா (கிளி/பூநகரி ம.வி), எஸ். பிரியதர்சினி (கிளி/ஜெயபுரம் ம.வி)

**உரத்து வாசித்தல்**

**தரம்-03**

வை.லதுசன் (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), எஸ்.பவித்திரன் (கிளி/ஜெயபுரம் ம.வி), ஏ.லதீசன் (கிளி/ஜெய்புரம் ம.வி).

(அ-9-254) (தொடரும்)

# இருபது வருடங்கள் சிறையில் தள்ளுவேன்; மஹிந்தவின் கூற்றுக்கு ஆர்ப்பரிக்கிறார் ராமதாஸ்

(தமிழகம்)

தமிழக மீனவர்களை 20 ஆண்டுகள் சிறையில் அடைக்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சதி செய்வதாக பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

பிரேசில் நாட்டின் ரியோடி ஜெனிரோ நகரில் நடைபெற்ற ஐ.நா. மாநாட்டில் உரை நிகழ்த்திய ராஜபக்ஷ இலங்கை கடல் எல்லைக்குள் தமிழக மீனவர்கள் புகுந்து மீன் வளங்களையும் அரிய கடல் செல்வத்தையும் கொள்ளையடிப்பதாக அபாண்டமாக குற்றம்சாட்டியுள்ளார்.


இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

சர்வதேச கடல் சட்டப்படி கடல் வளங்களைக் கொள்ளை அடிப்பவர்களை 20 ஆண்டுகள் சிறையில் அடைக்க முடியும். வங்கக் கடலில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களைக் கைது செய்து 20 ஆண்டுகள் சிறையில் அடைக்கும் நோக்கத்துடன் ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட போதும் ராஜபக்ஷவை தனியாக சந்தித்த போதும் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டோர் இதற்கு கண்டனம் தெரிவிக்கவில்லை. இது மிகவும் வருத்தமளிக்கிறது.

தங்களின் வாழ்வாதாரத்துக்காக மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் மீது கடந்த 30 ஆண்டுகளாக இலங்கை கடற் படையினர் பல்வேறு கொடுமைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இதுவரை 600 இற்கும் அதிகமான மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் தமிழக மீனவர்கள் மீது குற்றம் சாட்டி ராஜபக்ஷ பேசியிருப்பது இந்தியாவின் வலிமைக்கும் இறையாண்மைக்கும் விடப்பட்ட சவாலாகும்.




சீனாவின் ஆதிக்கத்தைத் தடுக்க இலங்கையை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும் என்ற தவறான நம்பிக்கையில் இலங்கையின் தவறுகளைக் கண்டிக்காமல் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதால் இன்று இந்நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களுக்கு எதிரான ராஜபக்ஷவின் பேச்சுக்கு உடனடியாக இந்தியா கண்டனம் தெரிவிப்பதுடன் கச்சதீவை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

(அ-2)


## மரண அறிவித்தல்

### சிவனடியான் சுவாமிநாதன்



சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட முன்னாள் சாரதியும் வாகனத்தரகருமான சிவனடியான் - சுவாமிநாதன் என்பவர் கடந்த 18.06.2012 அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.06.2012) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
தொ.பே:- 0770690067
(8670)



# சிறுவர் அரங்கம்

140

## பேசுவதை வைத்து ஏமாற்றினால்



ஓர் ஊரில் திண்ணன் என்ற வணிகன் இருந்தான். நெல் வாங்குவதற்கு அவன் அடுத்த ஊருக்குச்சென்றான்.

அங்கே வணிகன் ஒருவன் கூடையில் சிறிதளவு நெல்லை வைத்திருந்தான்.

அந்த நெல்லை எடுத்துப் பார்த்தான் திண்ணன். அவனுக்குப் பிடித்திருந்தது.

இந்த நெல் நன்றாக இருக்கின்றது. வேறு ஏதேனும் நெல் உன்னிடம் உள்ளதா?

## மரியாதைராமன் கதைகள்

என்று கேட்டான்.

என்னிடம் உள்ள நெல் இதுதான். நீங்கள் ஒரு பணத்திற்கு வேண்டுமானாலும் வாங்குங்கள். நூறு பணத்திற்கு வேண்டுமானாலும் வாங்குங்கள். இதைத் தவிர வேறு நெல் என்னிடம் இல்லை என்றான் அவன்.

இவனிடம் இந்த வகை நெல் தான் உள்ளது. வாங்குவோம் என்று நினைத்தான் திண்ணன்.

நூறு பணத்தை அவனிடம் தந்தான். நெல்லை எடுத்து வை. வண்டி மாட்டுடன் வருகிறேன் என்று புறப்பட்டான்.

சிறிது நேரத்தில் வண்டி மாட்டுடன் வந்தான்.

எங்கே நெல் மூட்டைகள் என்று அந்த வணிகனைக் கேட்டான்.

அந்தக் கூடை நெல்லையே காட்டினான் அவன். இந்த நெல்லைத்தான் உங்களுக்கு விற்றேன். எடுத்துச் செல்லுங்கள் என்றான்.

திடுக்கிட்ட திண்ணன் இது மாதிரிக்கு காட்டிய நெல் ஆயிற்றே. நூறு பணம் தந்தேனே கூடை நெல்லை தருகிறாயே என்று கேட்டான்.

நான் என்ன சொன்னேன். என்னிடம் உள்ள நெல் இதுதான். ஒரு பணத்திற்கும் வாங்குங்கள். நூறு பணத்திற்கும் வாங்குங்கள் என்றேன்.

ஒரு பணம் பெறும் நெல்லை நூறு பணத்திற்கு வாங்கினீர்கள். பணத்தை திருப்பத் தர மாட்டேன். இந்த நெல்லை எடுத்துச் செல்லுங்கள் என்றான் அவன்.

ஐயோ இப்படி ஏமாந்து விட்டோமே என்ன செய்வது என்று சிந்தித்தான் திண்ணன்.

நீதிபதி மரியாதைராமனிடம் சென்றான். தன்னை அந்த வணிகன் ஏமாற்றி விட்டதாக வழக்குத் தொடுத்தான்.

அவனை அங்கு வரவழைத்தார் மரியாதைராம்ன். என்ன நடந்தது என்று விசாரித்தார்.

திறமைசாலியான அவன் நீதிபதி அவர்களே நான் சொன்னது போலவே நடந்து கொண்டேன். பேசியதை மாற்றிப் பேசவில்லை. இவர் ஏமாந்ததிற்கு என்னைக் குற்றம் சொல்ல முடியாது என்றான்.

பேச்சை வைத்து ஏமாற்றுகிறான் இவன். அதைக் குற்றமில்லை என்று சாதிக்கிறான். இவனை என்ன செய்வது என்று சிந்தித்தார் நீதிபதி.

இருவரையும் பார்த்து அவர் இந்த வழக்கு சிக்கலான வழக்காக உள்ளது. வழக்கை ஆராய்ந்து தீர்ப்பு அளிக்க ஒரு மாதம் ஆகலாம்.

அதுவரை திண்ணன் வீட்டில் இவன் தங்கியிருக்க வேண்டும். திண்ணன் வேளா வேளைக்கு சாப்பிட வேண்டும்.

இவனுக்கு பாதி சோறு போட வேண்டும். தீர்ப்பு வழங்கும் நாளன்று உங்களை அழைக்கிறேன் என்றார்.

எனக்கு நல்ல நேரம் நூறு பணம் கிடைத்தது. திண்ணன் வீட்டில் ஒரு மாதம் உணவும் கிடைத்தது என்று மகிழ்ந்தான் அவன்.

திண்ணனை தனியே அழைத்தார் நீதிபதி.

அவனை எதிரே அமர்ந்து நாள்தோறும் வயிறார சாப்பிடும். அவனுக்கு இலையில் ஒரு சோற்றில் பாதியை வையும்.

அவன் உம்மை ஏதாவது கேட்பான். நீதிபதி சொன்னபடி நடந்து கொள்கிறேன் என்று சொல்லும். அவன் என்னிடம் வருவான் நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார்.

அந்த வணிகனுடன் தன் வீடு வந்தான் திண்ணன்.

உணவு நேரம் வந்தது. திண்



ணன் வயிறார உண்டான்.

அந்த வணிகனுக்கு இலையில் பாதி சோறு மட்டும் வைத்தான்.

கோபத்துடன் நீதிமன்றத்துக்கு வந்தான் அவன்.

நீதிபதி அவர்களே நீங்கள் சொன்னது போல எனக்கு சோறு போடவில்லை.

திண்ணனை அழைத்து விசாரிக்க வேண்டும் என்றான்.

திண்ணனை அழைத்தார் மரியாதை இராமன். ஏன் இவனுக்கு சோறு போடவில்லை என்று கேட்டார்.

உங்கள் கட்டளைப் படியே நடந்து கொண்டேன். இவனுக்கு வேளை தவறாமல் பாதி சோறு போட்டேன் என்றான் திண்ணன்.

எங்கே இவர் பாதி சோறு போட்டார். சோற்றுப் பருக்கையில் பாதியைத் தந்தார். சாப்பிடு என்றார். எப்படி அதைச் சாப்பிட்டு பசியாறுவது என்று கோபத்துடன் கேட்டான் அவன்.

நீதிபதி உனக்கு பாதி சோறு தான் போடச் சொன்னார். அதைத் தான் செய்தேன். என்மீது குற்றம் சுமத்த முடியாது என்றான் திண்ணன்.

நீதிபதி அவர்களே பாதி சோறு சாப்பிட்டு யாராலாவது உயிர் வாழ முடியுமா? எனக்கு வயிறார உணவு போடச் சொல்லுங்கள் என்றான் அவன்.

பேச்சை வைத்து நீர் திண்ணனை ஏமாற்றினீர். அதே போல அவரும் உம்மை ஏமாற்றினார். இதில் நீதிமன்றம் குறுக்கிட முடியாது.

அவரிடம் நூறு பணத்திற்கு உரிய நெல்லைத் தாரும். இல்லையேல் பாதி சோறு ஒரு மாதம் சர்ப்பிடும்.

எது உமக்கு விருப்பமோ அதைச் செய்யும் என்று கண்டிப்புடன் சொன்னார் நீதிபதி.

பாதி சோறு சாப்பிட்டு உயிர் வாழ முடியாதே நெல்லைக் கொடுத்து விடுவதே நல்லது என்று நினைத்தான் அவன்.

நீதிபதி அவர்களே! நான் இனி யாரையும் ஏமாற்ற மாட்டேன். நூறு பணத்திற்கு உரிய நெல்லை இவரிடம் தந்து விடுகிறேன்! என்றான்.

தன் திட்டம் வெற்றி பெற்றதை அறிந்து மகிழ்ந்தார் மரியாதைராமன்.

திண்ணன் அவருக்கு நன்றி சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

# ELATE Computer Systems

King of Computer World



இன்றைய மாறிவரும் உலகில் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை கணனிக்கல்வியை படிப்பதற்கு விரும்புகின்றனர். இதற்கு காரணம் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கும், சமூகத்தில் தாங்களும் கணனி அறிவுள்ளவர்கள் என்பதை மற்றவர்களுக்கும் நிரூபிப்பதற்கு முயல்கின்றார்கள். ஆனால் அவர்களின் எண்ணம்போல் நடத்துவதில்லை. இதற்கு காரணம் அவர்கள் தேர்வு செய்யும் கணனிக்கல்விநிறுவனம் அவர்களுக்கு ஏற்றாற் போல் அமைவதில்லை. பல பேருடன் இணைந்து கற்றுவிட்டு-தேவையேற்படும் போது யாரும் கேட்டால் தொடர்பில் இல்லாததால் மறந்து விட்டேன் என்பார்கள்.ஆனால் Elate Computer System நிறுவனத்தில் வித்தியாசமான கற்பித்தல் முறையில் எல்லோருக்கும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதுமான பாடத்திட்டத்தில் விரிவுரைகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் நடைபெறுகின்றது. வரையறுக்கப்படாத 100% செயன்முறை பயிற்சி வழங்கப்படுவதுடன் தனிப்பட்ட கவனம் ஒவ்வொரு மாணவர்களிலும் செலுத்தப்படுகின்றது. இதனால் பல மாணவர்கள் வேறு இடங்களில் படித்து Certificate உள்ளவர்கள் கூட மறுபடியும் எமது நிறுவனத்தில் இணைந்து கல்வியை தொடர்ந்து நற்சான்று பகிர்கின்றார்கள். நீங்களும் இனி எம்முடன் இணைந்து கணனி ஜாம்பவான் ஆகுங்கள்.

**இலங்கை அரசாங்கத்தினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், திறமையானவர்களுக்கு எமது நிறுவனத்திலேயே வேலைவாய்ப்பும் வழங்கப்படும்.**



(8697)

## Diploma in Microsoft Office

- கணனி அறிமுகம்
- கணனி இயங்குவது தொடர்பான விளக்கம்
- இயங்குதளம் XP மற்றும் Windows 7 File போன்றவற்றின் அறிமுகம் கையாளும் தன்மை MS Word-MS Excel- MS Power Point-MS Access
- எவ்வாறு Print எடுத்தல் போன்ற பயிற்சி

## Certificate in Internet & Email

- கணனி அறிமுகம்
- இன்ரநெற் என்றால் என்ன?, எவ்வாறு உருவாக்கம் பெற்றது அறிமுகம்.
- இணையத்தளங்கள் பற்றிய அறிமுகமும் பார்வையிடும் முறையும் பயிற்சியும்
- Email ஒன்றை எவ்வாறு உருவாக்கல் மற்றும் பயன்படுத்தல் பயிற்சி
- தேடுபொறி அறிமுகமும் பயன்படுத்தும் முறையும் பயிற்சி
- முகம் பார்த்து கதைப்பது எப்படி? Skype மற்றும் Massanger கள் அறிமுகமும் பயிற்சியும் Facebook, Twitter போன்ற சமூகவலைத்தளங்களை எவ்வாறு பயன்படுத்தப்படுவது மற்றும் உருவாக்குவது பற்றிய பயிற்சி
- Dongle, Adsl போன்ற வலையமைப்புடன் தொடர்பை ஏற்படுத்தும் இணைப்புக்களை எவ்வாறு கையாள்வது, தொழிற்பட வைப்பது போன்ற பயிற்சி
- இலவசமாக எவ்வாறு இணையத்தளம் ஒன்றை உருவாக்குவது பற்றிய அறிமுகம்
- மின் வணிகம் (E.Business) தொடர்பான அறிமுகம்.

**1 தொடக்கம் 9 ஆம் ஆண்டுவரையான பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்களும் பிரபல்யமான ஆசிரியரால் நடாத்தப்படுகின்றது.**

## Diploma in Office Management

(அலுவலகங்களில் பணிபுரிவோருக்கு உகந்தது)

4 Month

- கணனி அறிமுகம்
- கணனி இயங்குவது தொடர்பான விளக்கம்
- இயங்குதளம் XP மற்றும் Windows 7 போன்றவற்றின் அறிமுகம் கையாளும் தன்மை
- File மற்றும் Software ( மென்பொருள்) களை உபயோகப்படுத்தும் முறை
- MS Word-MS Excel-MS Power Point-MS Access-Internet, Email அறிமுகம்
- எவ்வாறு Print, Scanning, CD Writing செய்தல் தொடர்பான பயிற்சி

## Diploma in Computer Hardware Engineering

3 Month

- கணனி அறிமுகம்
- கணனி பாகங்கள் அறிமுகம்
- கணனி இயங்குவது தொடர்பான விளக்கம்
- இயங்குதளங்கள் அறிமுகம், கையாளும் தன்மை எவ்வாறு நிறுவுதல் போன்ற விளக்கம்
- கணனி ஒன்றை எவ்வாறு உருவாக்கல் பயிற்சி
- மென்பொருட்களை எவ்வாறு நிறுவுதல் பயிற்சி
- பிழையொன்றை எவ்வாறு கண்டறிதல், நிவர்த்தி செய்தல் போன்ற விளக்கத்துடன் பயிற்சி
- Networking அறிமுகம் போன்ற பல அம்சங்களுடன்.......


## Diploma in Kids Programme Age 6-14

*சிறார்களுக்காகவே முற்றிலும் வடிவமைக்கப்பட்ட எளிதாக விளங்கக்கூடியதுமான நவீன பாடமுறை*

6 Month

- கணனி அறிமுகம்
- கணனி எவ்வாறு இயங்குவது தொடர்பான விளக்கம்
- இயங்குதளம் XP மற்றும் Windows 7 போன்றவற்றின் அறிமுகம்
- கணனி அனைத்துப் பாகங்களும் அறிமுகம்
- Application Software அறிமுகம்
- Paint போன்ற சிறியவரை கலை மென்பொருள் பயன்படுத்த பயிற்சி
- சிறுவர் கணனி விளையாட்டுக்களை எவ்வாறு நிறுவுதல், எவ்வாறு பயன்படுத்தல் போன்ற பயிற்சி
- சிறுவயதிலேயே Typing,Printing, Scanning, CD Writing செய்வதற்கும் Skype போன்றவற்றை கையாளுவதற்கும் 100% பயிற்சி





## Diploma in Desktop Publishing

4 Month

- கணனி அறிமுகம்
- வரைகலை தொடர்பான மென்பொருட்கள் அறிமுகம்
- Adobe Pagemaker
- Adobe Photo Shop
- Adobe Corel Draw
- எவ்வாறு Scanning, Printing செய்வது தொடர்பான பயிற்சி

உங்கள் படங்களை வித்தியாசமான பகுதிகளில் நிற்பது போன்று செய்வது உங்கள் படத்தை அழகாக தெரியவைப்பது, விளம்பரங்பள் செய்வது தொடர்பில் சிறப்புப் பயிற்சி வழங்கப்படும்.

## Certificate in Adobe Photo Shop

1Month



**பாடசாலை மாணவர்களுக்கான அரச பாடத்திட்டத்திற்கு அமைய மிகவும் எளிதாக விளங்கக்கூடியவாறான ICT, GIT வகுப்புகளும் நடைபெறுகின்றன.**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்(25,27,30)**

தொடர்புகளுக்கு
Email: elatecomputer@gmail.com
Hotline:0774384353
1048,K.K.S.Road, Jaffna.
(பூநாறி மரத்தடி அருகில்)

# பாக். கடற்படையில் சீன போர்க்கப்பல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கடற்படைக்கு சீனா நவீன போர்க்கப்பல் ஒன்றை வழங்கியுள்ளது. இதில் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளை ஏவும் வசதி இடம் பெற்று இருப்பதாக தெரிகிறது. இந்தப் போர்க்கப்பல் கராச்சியில் உள்ள பாகிஸ்தான் கடற்படையில் இணைந்தது.

இந்நிகழ்வினை கடற்படை இணைத்தளபதி காலித் வின்னி ஆரம்பித்து வைத்தார். அவர் கூறுகையில், இந்தப் புதிய போர்க்கப்பல் வருகை மூலம் கடல்பகுதி பாதுகாப்பு அதிகரிக்க உதவியாக இருக்கும். மேலும் ஒரு போர்க்கப்பல் கராச்சியில் கட்டப்பட்டு வருகிறது. அதுவும் விரைவில் கடற்படையில் இணையும் என்று கூறினார். இந்த நடவடிக்கை மூலம் பாகிஸ்தான் தனது கடற் படை வலிமையை அதி கரித்து வருவது தெரிய வருகிறது. (அ-2)



கர்நாடக மாநில தலைநகரில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜேர்மன் வெளியுறவுத்துறை அமைச்சர் கைடோ வெஸ்டர் வெல்லி (வலது) சந்தித்த போது...

# இந்தோ.வில் நிலநடுக்கம் 6.6 ரிக்டர் அளவில் பதிவு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் சுமத்ரா தீவில் நேற்றுக் காலை யாரும் எதிர்பாரா சூழலில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.6 ஆக பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விபரம் குறித்த தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

ஆனால் இதனைத் தொடர்ந்து மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் ஏனைய இடங்களையும் தாக்கும் அபாயம் இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.

மேலும் பொதுமக்களை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்ல அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. (அ-2)

# சீனா, பூட்டான் உறவை வலுப்படுத்த இரு நாட்டுத் தலைவர்கள் விருப்பம்

(பெய்ஜிங்)

சீனா, பூட்டான் நாடுகளுக்கிடையேயான உறவை வலுப்படுத்தவும் இரு நாடுகளுக்கிடையேயான எல்லைப் பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வு காணவும் இருநாட்டு தலைவர்களும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பிரேசிலில் ரியோடி ஜெனிரோவில் சர்வதேச சுற்றுச் சூழல் உச்சி மாநாடு இடம்பெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட சீன பிரதமர் வென்ஜியாபோவும் பூட்டான் பிரதமர் ஜிக்மி தின்லியும் கடந்த வியாழக்கிழமை சந்தித்துப் பேசினர்.

இரு நாட்டு பிரதமர்களும் சந்தித்துக் கொண்டது இதுவே முதல் முறை. ஜியோபாவுடன் நடந்த சந்திப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருநாடுகளுக்கிடையே அமைதியை ஏற்படுத்தும் வகையில் பூட்டானுடனான உறவை வலுப்படுத்த சீனா விரும்புவதாக தின்லியிடம் ஜியாபோ தெரிவித்தார். (அ-2)

# சூடானில் உணவுப் பஞ்சம் மீண்டும் தலைதூக்குகிறது

சூடானில் உணவுப் பொருட்களின் விலைகளை அந்நாட்டு அரசு உயர்த்தியுள்ளது பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உணவுப் பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்து தலைநகர் கர்தூமில் பொதுமக்கள் போராட்டத்தில் களமிறங்கினர்.

மக்களின் போராட்டம் வலுவடைவதை தடுக்கும் பொருட்டு சூடான் அரச பொலிஸார் கண்ணீர் புகைக்கண்டுகளை வீசி கலைத்தனர்.

இதனால் தலைநகர் முழுவதுமே கரும்புகையால் சூழப்பட்டு அலங்கோலமாக காட்சியளிக்கிறது.

சூடானில் உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக அந்நாட்டில் மீண்டும் உணவுப் பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளது. ஏற்கனவே 1994 ஆம் ஆண்டு ஏற்பட்ட உணவுப் பஞ்சம் மிகவும் கொடியது. இந்த காலகட்டத்தில் உணவு தேடிச் செல்லும் சிறுமியை ஒரு பிணந்தின்னி கழுகு துறத்துவது போன்ற எடுக்கப்பட்ட புகைப்படமும் மிகவும் பிரபலமானது. இது போன்ற ஒரு சம்பவம் சூடானில் மறுபடியும் நிகழக்கூடாது என்பதில் ஐக்கிய நாடுகள் மிகுந்த கவனத்தில் இருக்க வேண்டும். (அ-2)

# ஆப்கான் நட்சத்திர விடுதியில் தீவிரவாதிகள் தாக்குதல் 17 பொதுமக்கள் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் காபூல் நகர் அருகேயுள்ள பிரபல நட்சத்திர ஹோட்டலை தலிபான் தீவிரவாதிகள் கைப்பற்றி 17 பேரை கொன்றனர். இராணுவம் கடும் துப்பாக்கி சண்டை நடத்தி தீவிரவாதிகளை கொன்று 40 பிணைக் கைதிகளை பத்திரமாக மீட்டுள்ளனர்.



ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலுக்கு அருகே ஏரிக்கரையில் பிரபல நட்சத்திர ஹோட்டல் உள்ளது. இங்கு வெளிநாட்டினர் மற்றும் வசதி படைத்தவர்கள் வாரந்தோறும் விருந்து நிகழ்ச்சிகளை நடத்துவது வழக்கம். அதுபோல நேற்று முன்தினம் இரவு ஏராளமானோர் அங்கு கூடினர்.

நள்ளிரவு 11.30 மணி அளவில் 5 தீவிரவாதிகள் துப்பாக்கிகள், வெடிகுண்டு, ஏவுகணை ஆகியவை சகிதம் இந்த நட்சத்திர ஹோட்டலுக்குள் நுழைந்து கைப்பற்றினர். ஹோட்டலில் இருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட அனைவரையும் துப்பாக்கி முனையில் சிறைபிடித்து பிணைக் கைதிகளாக வைத்தனர்.

இந்த தீவிரவாதிகளில் ஒருவன் தனது உடலில் வெடிகுண்டுகளை கட்டி இருந்தான். இதனால் ஹோட்டல் நிர்வாகி ஊழியர்களும் பயத்தில் உறைந்து போனார்கள்.

தகவல் கிடைத்ததும் இராணுவத்தினர் சம்பவ ஹோட்டலுக்கு விரைந்து வந்து தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் பொது மக்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களுக்கு உதவியாக அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர்கள் விரைந்தன.

இதனை அடுத்து இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை மூண்டது. இது நேற்று பகல் வரை சுமார் 12 மணி நேரம் நீடித்தது.

17 பேர் பலி

இந்தச் சண்டையில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகளின் பிடியில் இருந்த 40 பிணைக் கைதிகளும் பத்திரமாக உயிருடன் மீட்கப்பட்டனர். மேலும் தீவிரவாதிகளின் தாக்குதலில் 17 பேர் பலியாகி விட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். இது குறித்து தலிபான் தகவல் தொடர்பாளர் சபியுல்லா குறிப்பிடுகையில், வெளிநாட்டினர் பலர் தங்கியிருக்கும் ஸ்போஷ்மாய் ஹோட்டலில் விபசாரம் நடக்கிறது. இங்கு வருப வர்கள் ஆண், பெண் பாகுபாடின்றி மது அருந்துகின்றனர். இதெல்லாம் ஆப்கான்பாரம்பரியத்துக்குவிரோதமானது. இதனால் தான் இந்தத் தாக் குதலை நடத்தினோம் என்றார். (அ-2)

# கேட்டதை விட அதிகளவு பணம் வழங்கிய ஏ.ரி.எம்.

(லண்டன்)

லண்டனில் உடனுக்குடன் பணம் வழங்கும் ஏ.ரி.எம். இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

இந்த ஏ.ரி.எம். இயந்திரத்தில் வாடிக்கையாளர் பணம் எடுத்தனர். அப்போது அவர்கள் கேட்ட பணத்தை விட 2 மடங்கு பணம் வந்தது. ஆனால், கணக்கு சீட்டிலோ அவர்கள் தொகைதான் பதிவாகி இருந்தது. இதனால் மகிழ்ச்சி அடைந்த வாடிக்கையாளர்கள் மீண்டும் வரிசையில் நின்று தங்களின் பணத்தை எடுத்தனர். மேலும் தங்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் இதுபற்றி தகவல் தெரிவித் தனர்.

இதையடுத்து அந்த ஒரு ஏ.ரி.எம்.இயந்திரத்தில் மட்டும் கூட்டம் அலைமோதியது. மக்கள் ஆர்வமாக பணம் எடுத்ததால் அந்த இயந்திரத்தில் இருந்த மொத்த பணமும் சிறிது நேரத்தில் காலியானது. இதற்கிடையே நேர்மைக்குணம் கொண்ட ஒரு வாடிக்கையாளர் இது குறித்து வங்கி நிர்வாகத்துகக்கு தகவல் வழங்கியதை அடுத்து ஊழியர்கள் அந்த தொழில்நுட்ப கோளாறை சரி செய்து 2 மடங்கு பணம் வருவதை தடுத்தனர். இந்ததவறுவங்கிஊழியர்களின் கவனக்குறைவால் ஏற்பட்ட தெனவும் வாடிக்கையாளர்களிடம் இருந்து அவர்கள் இரட்டிப்பாக எடு த்த பணத்தை திரும்ப பெற முடி யாது. ஏனெனில் இயந்திரம் தந்த கணக்கு சீட்டில் அவர்கள் கேட்ட தொகை தான் பதிவாகியுள்ளது. (அ-2)

## உலக தரிசனம்

# சிரியாவில் அரசு எதிர்ப்பு படையில் அல்கொய்தா தீவிரவாதிகள் ஊடுருவல்

## அதிர்ச்சியில் அமெரிக்கா

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்திற்கு எதிராக கடந்த ஓராண்டிற்கும் மேலாக போராட்டம் நடந்து வருகின்றது.

ஜனாதிபதியை எதிர்த்து போராட்டம் நடத்தும் கிளர்ச்சி படைக்கு புதிய ரக ஆயுதங்களும் தோள்மீது வைத்து சுடும் ஏவுகணை சாதனங்களும் கிடைப்பதாகவும் இவை லெபனானில் இருந்து கொள்ளையடிக்கப்பட்டு கள்ள சந்தை வழியாக கிடைப்பதாகவும் கூறப்படுகிறது.

இதுமட்டுமல்லாமல் அல்கொய்தா இயக்கத்தினரின் ஊடுருவலும் அதிகரித்து வருவதாக கருதப்படுகிறது. இது அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளை அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இராணுவ அமைச்சர் லியான் பெனட்டா கூறுகையில், சிரியாவில் நடக்கும் மோதல்களத்தில் தோள் மீது வைத்து சுடும் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பயன்படுத்தப்படுவது கவலை அளிக்கிறது. இவை உடனடியாக தடுக்கப்படவேண்டும் என்று தெரிவித்தார்.

முன்னாள் சி.ஐ.ஏ அதிகாரியான புருசி ரியிடேல் கூறுகையில், சிரியா ஜனாதிபதி எதிர்க்கும் படையில் அல்கொய்தா மற்றும் வேறு தீவிரவாத இயக்கங்களின் ஊடுருவல் இருக்கிறது என தெரிவித்தார். (அ-2)

தோல்வியைக் கண்டு துவளாதீர்கள். அறிவை மேன்மேலும் பெருக்கிக் கொள்ள தரப்பட்ட வாய்ப்பே தோல்வி -ஹென்றி ஃபோர்டு

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பறித்தவற்றை மீட்டெடுக்கும் புதிய பிரச்சினையில் தமிழ்மக்கள்

முப்பது வருடகால ஆயுதப் போராட்டத்தின் தோல்வி தமிழ்மக்களுக்கு சொல்லொணா துன்பத்தைத் தந்துள்ளது.

போராட்டத்தின் தோல்வி என்பதற்கப்பால், எங்களிடம் ஏற்கெனவே இருந்தவற்றையும் இழந்துபோன துன்பம் பெருங்கொடுமை.

தமிழ் மக்களின் உரிமை என்பது, இலங்கையில் சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற உரிமைகளுடன் தொடர்புபட்டது.

அந்த உரிமைகளை பெறவேண்டியே அகிம்சைப் போராட்டமும்,ஆயுதப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால், ஆயுதப் போராட்டத்தின் தோல்வியால், உரிமையை வென்றெடுப்பதற்கு அப்பால் யுத்தத்திற்குப் பின்பாக அரசினால் பறிக்கப்பட்ட எங்களுக்கே உரித்தான நில ஆதனம் உட்பட பலவற்றை மீட்டெடுக்கும் புதிய பிரச்சினைக்குத் தமிழ்மக்கள் முகம் கொடுத்துள்ளனர்.

குறிப்பாக தமிழர் தாயகத்தில் இப்போது நடைபெற்றுவரும் நிலக் கபளீகரம் என்பது உயர்பாதுகாப்பு வலயம் போன்ற பிரச்சினைகளுடன் தொடர்புபட்டதல்ல.

மாறாக் எங்கள் பூர்வீக சொத்தை- சட்ட ரீதியாக எங்களுக்கே உரித்தான- எங்கள் வாழ்விடத்தை,

இராணுவமுகாம்களுக்காகவும் படையினரின் குடியிருப்புக்களுக்காகவும் இழப்பதென்பது இனப்பிரச்சினை என்ற சொற்பதத்தை மேலும் விரிவுக்குள்ளாக்கியுள்ளது.

யுத்தத்தின் முடிபுக்கு பின்னர் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்த சர்வதேச அழுத்தம் இலங்கை அரசுக்கு இடைஞ்சலாக இருக்கும் போதும்,

தமிழர் தாயகத்தில் இடம்பெறும் நில அபகரிப்பு என்பது எதற்கானது என ஆய்வது அடிப்படையானது.

அதாவது இனப்பிரச்சினை என்று கருதப்படுகின்ற சம உரிமையில்லாத நிலைமையில் இருந்து தமிழ் மக்களை திசை திருப்பி பறித்ததை எடுப்பதற்காக பாடுபடும் அளவில் உரிமை குறித்த விடயங்களில் இருக்கக் கூடிய கவனத்தை கலைப்புச் செய்கின்ற மிகப் பெரிய இராஜதந்திரத்தில் அரசு இறங்கியுள்ளது.

எனவே, தமிழ்மக்கள் இப்போது இரட்டைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

அதாவது, பேரினவாத சிந்தனையில் இலங்கை எங்கள் நாடு என்ற சிங்கள ஆட்சியாளர்களின் நினைப்பை முறியடிப்பது மற்றும் போருக்குப் பின் பறிக்கப்பட்டவற்றை மீட்பது என்றவாறு இருவகைப் போராட்டம் தமிழ்மக்களை வலியுறுத்தி நிற்கின்றது.

இதில் தமிழ் அரசியல் தலைமைகளிடம் இருக்கக்கூடிய ஒற்றுமையும், சர்வதேசத்தை கையாளும் நுட்பமுமே எங்களுக்கான வெற்றியை தீர்மானிக்கும்.

# மாற்றுவலுவுள்ளோர் இலக்கியம் தனித்துவ கவனம் பெறவேண்டும்

## பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவிப்பு

மாற்றுவலுவுள்ளோர் இலக்கியம் தனித்துவமான கவனம் பெறவேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் பேராசிரியருமான என்.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

கலாபூஷணம் நாவற்குழியூர் சு. சிவராசா எழுதிய சிறகு விரிக்காத பறவைகள் என்ற சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றுவலுவுள்ளோர்களுக்கான கவனிப்பு என்பது வெறும் நிவாரணம், உதவி எனும் நிலைகளுக்கு அப்பால் அவர்களது உரிமை சார்ந்ததாக அமைய வேண்டும். அவர்களின் சுய கௌரவம், சுதந்திரம் முதலியவற்றை மதிப்பதாகவும் பாரபட்சம் இல்லாத சம வாய்ப்புக்களையும் வாய்ப்புக்களுக்கான வழி வகைகளையும் காட்டுவதாகவும் அமைய வேண்டும். இந்தவகையில் மாற்றுவலுவுள்ளோர் இலக்கியங்கள் தனித்துவமாகக் கவனிக்கப்பட வேண்டிய அவசியத்தை உடையவை. இவ்விலக்கியங்கள் அவர்களின் மனவெழுச்சி வெளிப்பாடுகளாக மட்டுமன்றி தனித்துவமான ஆக்கத்திறன் அனுபவங்களாகவும் அமைந்துள்ளன. ஒளிப் புலக்காட்சியை இழந்த போதிலும் தங்கள் அக ஒளியால் உலகிற்கு ஒளிதரும் இவர்களின் படைப்புக்கள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட வேண்டியவை. தலித் இலக்கியம், பெண்ணிய இலக்கியம் போன்று மாற்றுவலுவுள்ளோர் இலக்கியம் என்ற தனிவகையான கவனம் எமது புலத்தில் ஏற்பட வேண்டியுள்ளது. வடபுலத்தில் மாத்திரம் சுமார்15 ஆயிரம் மாற்றுவலுவுள்ளோர் என்ற விழுக் காட்டுக்குள் வருகின்றனர். இயற்கையான அங்கக்குறைபாடுகளுக்கு மேலாக போரின் அனர்த்தங்களுக்குள் நலிந்து போன அங்கவீனமானவர்களின் வாழ்க்கை நிலை மிகமோசமானது.

அவர்களின் மனவுணர்வுகளை வெறுமையான புள்ளிவிபரங்களால் உணர முடியாது. அகரீதியான, தன்மை ரீதியான தரவுகள்தான் முக்கியமானவை. இந்தவகையில் மாற்றுவலுவுள்ளோர் இலக்கியத்தில் போர் அனர்த்தங்களால் நலிந்தவர்களின் கதைகளும் முக்கியமாக பதிவு செய்யப்படவேண்டியவை.

சிவராசாவின் படைப்புக்கள் மாற்றுவலுவுள்ளோரின் அகவலிகளை பேசுகின்ற அதேவேளை மனச்சாட்சியற்ற உலகம் பற்றிய கேள்விகளை எழுப்புவனவாகவும் உள்ளன. பேசமுடியாதவர்களின் குரலாகவும் காணமுடியாதவர்களின் விழியாகவும் அவரது வார்த்தைகள் இச் சிறுகதைகளின் ஊடாக எங்கள் அக விழிகளைத் திறக்கின்றன என்றார். (அ-2)

## கோப்பாய் பகுதியில் தொடரும் மின்தடை நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேசத்தில் தொடர் மின்வெட்டால் அப்பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள் உட்பட அலுவலகங்களில் பணிபுரிவோர் என அனைத்து மட்டத்தினரும் பாதிக்கப்படுவதாக பிரதேசவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் மின்சாரம் தடைப்படும் என பத்திரிகைகளில் முன்பே அறிவிக்கப்பட்டாலும் பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டுள்ள நேரங்களுக்குக் கூடுதலாகவும் மாறாகவுமே மின்சாரம் தடைப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக காலை வேளையில் மின்சாரம் தடைப்படுவதனால் பாடசாலை மாணவர்களும் அலுவலகங்களுக்குச் செல்வோரும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

பகல் வேளைகளிலும்மின்சாரம் குறித்த பகுதியில் தடைப்படுவதோடு இரவுவேளைகளிலும் மின்சாரம் தடைப்படுகின்றது.

இது தொடர்பாக மின்சார சபையிடம் இப்பகுதி மக்கள் தொலைபேசியூடாக தொடர்புகொண்டு கேட்டபோது கோப்பாய் பிரதேசத்திற்கு பளையினூடாகவே மின்சாரம் வருவதாகவும் பளையில் தேங்காய் வீழ்ந்தால் கோப்பாயில் மின்சாரம் தடைப்படுவதை தடுக்கமுடியாது என பதிலளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். (அ-4)

## இலவச மருத்துவமுகாம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் லயன் டாக்டர் வே.தம்பித்துரை, ஒருவருட ஞாபகார்த்தமாக இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கண் பரிசோதனை, இரத்தப்பரிசோதனை மற்றும் எடை கூடிய இளையோருக்கான வைத்திய ஆலோசனையும் இலவசமாக மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படவுள்ளது. வைத்திய ஆலோசனையை வைத்திய கலாநிதி டாக்டர் சிறிதரன் வழங்கவுள்ளார். (அ-3-29)

## மஹோற்சவம்

(சாவகச்சேரி)

கல்வயல் பெருங்குளம் சந்தி ஸ்ரீ அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்து எதிர் வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி மாலை சப்பறத் திருவிழாவும் மறுநாள் காலை 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் 3 ஆம் திகதி காலை 11 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெற்று நிறைவடையவுள்ளது. (அ-3-29)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

## வந்த வல்வினை மாளுஞ் சிவாயவே



ஒருவ னாலே உலகம் உதித்ததே
ஒருவ னாலே உலகம் நிலைத்ததே
ஒருவ னாலே உலகம் ஒடுங்கிற்றே
ஒருவ னேயென் னுறுதி சிவாயவே

ஓங்கா ரத்தி லுதித்த துலகெலாம்
ஓங்கா ரத்தில் நிலைத்த துலகெலாம்
ஓங்கா ரத்தி லொடுக்கு முலகெலாம்
ஓங்கா ரத்தி லுறுதி சிவாயவே

# உள்ளதை உள்ளவாறு சொல்லி உண்மைக்கு சான்று பகர்வோம்

இன்று நாம் திருமுழுக்கு யோவானின் பிறப்பு விழாவைக் கொண்டாடுகிறோம். ஆண்டவர் இயேசு, அன்னை மரியா இவர்களோடு பிறப்பு விழாவைக் கொண்டாடும் ஒரே புனிதர் இவர் மட்டுமே. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள். இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என்று ஜோர்தான் நதியோரம் வீரமுழக்கமிட்ட திருமுழுக்கு யோவானின் குரலொலி இயேசுவைக் கவர்ந்தது. சட்டங்களையும் சடங்கு

## பரமபிதா காட்டிய பாதை

களையும் உயர்த்திப் பிடிக்காமல் அன்பையும் நீதியையும் சமத்துவத்தையும் பகிர்வையும் வலியுறுத்திய இவரது புரட்சிக்கருத்துக்கள் இயேசுவின் கருத்துக்களோடு ஒருமித்திருந்தன.

இன்று எம் நாட்டின் நிலவரம் போல் அன்று திருமுழுக்குயோவான் காலத்தில் அங்கு அரசியல் பொருளாளதார ரீதியில் இஸ்ரயேல் மக்களின் நிலைமை மிகவும் பரிதாபமாக இருந்தது. அரசியல் ரீதியாக நிரந்தர விடுதலையும் பொருளாதார ரீதியாக சிறந்த முன்னேற்றம் பெறுவதற்கு இஸ்ரயேல் மக்கள் ஏக்கத்துடன் துடித்துக் கொண்டிருந்தனர். அப்போது திருமுழுக்கு யோவான் தம் போதனையின் போது ஆன்மீக மறுமலர்ச்சி பெற வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினர்.

திருமுழுக்கு யோவான் உள்ளதை உள்ளவாறு சொல்லி உண்மைக்குச் சான்று பகர்கின்றார். அஞ்சா நெஞ்சத்தோடு மன்னரது தவறுகளையும் சுட்டிக்காட்டியவர். மக்கள் அவரை மெசியாவாக நினைத்துக்கொண்டு அவரை நெருங்கியபோது அவர்களின் அறியாமையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தானேதான் மெசியா என்று சொல்லி இறைவனின் மீட்புத் திட்டத்தில் குழப்பம் ஏற்படுத்திடவில்லை. அவர் இயேசுவின் வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்தி நல்வழிப்பாதையில் வாழ வழிகாட்டியவர். இயேசுவுக்கும் திருமுழுக்குக் கொடுத்தவர். அதுபோது இயேசுவை மக்களுக்கு வரவிருந்த மீட்பர் இயேசுதான் என அறிமுகப்படுத்தினார்.

நாம் எம் வாழ்வைத் திருப்பிப் பார்க்கும்போது பல நேரங்களில் காற்றைப் போல, கடலைப்போல இறைவன் நம்மைச் சூழ்ந்திருந்தாலும் அவரைப் புரிந்துகொள்ளாமல் இருந்ததை இப்போது எண்ணிப் பார்க்கலாம். முக்கியமாக நம் துன்ப நேரங்களில் இறைவன்காணாமற் போய் விட்டதாக எண்ணியிருக்கிறோம்.



திருமுழுக்கு யோவான் படைத்த இந்தவரலாறு 20 நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகிறது. உன் பிறந்தோரும் உறவுகளும் கூடி வரும் திருநாளில் நாம் ஒருவரை ஒருவர் இறைவனுக்கு அறிமுகம் செய்து வைப்போம். உடன் பிறந்தோரும் உறவுகளும் ஏன் இந்த உலகம் முழுவதுமே உன்னதமான வரலாறு படைக்க நாம் கருவிகளாவோம்.

ம.பிரான்சீஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# கனேரியாவுக்கு இங்கிலாந்தில் ஆயுள்தடை



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் டேனிஷ் கனேரியா 2009 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இங்கிலாந்தில் நடந்த டர்ஹம் அணிக்கு எதிரான உள்ளூர் போட்டியில் (40 ஓவர் கொண்ட ஆட்டம்) எஸ் செக்ஸ் அணிக்காக பங்கேற்றார். இந்த போட்டியில் எஸ் செக்ஸ் வேகப்பந்து வீச்சாளர் 24 வயதான மெர்வின் வெஸ்ட்பீல்டுடன் இணைந்து அவர் சூதாட்டத்தில் ஈடுபட்டது அம்பலமானது. வெஸ்ட்பீல்டு அந்த ஆட்டத்தில் 7 ஓவர்கள் பந்து வீசி 60 ரன்களை வாரி வழங்கினார். விக்கெட் ஏதும் வீழ்த்தவில்லை. என்றாலும் அந்த ஆட்டத்தில் எஸ்செக்ஸ் அணி 277 ரன்கள் இலக்கை 19 பந்துகள் மீதம் வைத்து எட்டி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

இது தொடர்பான விசாரணையின் போது ஓவரில் குறிப்பிட்ட ரன்களை விட்டுக் கொடுப்பதற்காகப் பணம் பெற்றுக் கொண்டதை மெர்வின் ஒப்புக் கொண்டார். இதையடுத்து கைது செய்யப்பட்ட இங்கிலாந்தை சேர்ந்த மெர்வினுக்கு 4 மாதங்கள் சிறைதண்டனை விதிக்கப்பட்டது. இங்கிலாந்து கிரிக்கொட் வாரியம் அவருக்கு 5 ஆண்டுகள் விளையாட தடை விதித்தது. ஆனால் கனேரியா தன் மீதான புகாரை மறுத்தா. அவர் மீதான குற்றச் சாட்டுக்களுக்கு போதிய ஆதாரம் இல்லை என்று கூறி பொலிஸார் அவரை விடுவித்தனர்.

இதைத் தொடர்ந்து இது குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் வாரியத்தின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு விசாரணை நடத்தியது. அப்போது இந்தியாவை சேர்ந்த தொழிலதிபர் (சூதாட்ட தரகர்) அனுபவத்தை கனேரியா எப்படி அறிமுகப்படுத்தினார்? உள்ளிட்ட ஆதாரங்களை ஒழுங்கு நடவடிக்கை குழுவிடம் மெர்வின் அளித்தார். விசாரணை முடிவில் கனேரியாவுக்கு இந்த சூதாட்டத்தில் தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டு இருப்பதாக ஒழுங்கு நடவடிக்கை குழு அறிவித்தது.

டர்ஹம் அணிக்கு எதிரான ஆட்டத்தில் நீ முழு திறமையை வெளிப்படுத்தாதே. சாதாரணமாக விளையாடு என்று வேண்டுமென்றே மெர்வினை தூண்டி விட்டது, விளையாட்டின் நன்மதிப்பை குறைக்கும் வகையில் நடந்து கொண்டது ஆகிய இரு குற்றச்சாட்டுக்கள் கனேரியா மீது சுமத்தப்பட்டு அவை நிரூபிக்கப்பட்டு உள்ளன. எனவே இங்கிலாந்து கிரிக்கெட் வாரியத்தின் வரம்புக்குட்பட்ட அது நடத்தும் எந்தவித கிரிக்கெட் போட்டிகளிலோ அல்லது ஒருங்கிணைப்பு பணி அல்லது கிரிக்கெட் நிர்வாகங்களிலோ கனேரியா பங்கேற்க ஆயுட்கால தடை விதிக்கப் படுவதாக இங்கிலாந்து ஒழுங்கு நடவடிக்கை குழு நேற்று முன்தினம் பர பரப்பான தீர்ப்பளித்தது. இதன்படி இனி தனது வாழ்நாளில் இங்கிலாந்தில் நடக்கும் கவுண்டி உள்ளிட்ட எந்த போட் டிகளிலும் கனேரியா கலந்து கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டது.

சூதாட்டத்தில் சிக்கிய பாகிஸ்தான் முன்னாள் கேப்டன் சல்மான் பட் இப்போது தான் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் இன்னொரு வீரர் கனேரியா சூதாட்ட பிரச்சினையில் மாட்டிக் கொண்டது பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திற்கு மீண்டும் ஒரு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

## தென்னாபிரிக்காவை வீழ்த்தியது வங்கதேசம்



தென் ஆபிரிக்க அணிக்கெதிரான முத்தரப்பு ரி 20 போட்டியில் வங்கதேச அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிம்பாவே, தென் ஆபிரிக்கா, வங்கதேச அணி களுக்கு இடையிலான முத்தரப்பு ரி 20 தொடரில் விளையாடுகின்றன. ஹராரேயில் நேற்று முன்தினம் நடந்த ஐந்தா வது போட்டி யில் தென் ஆபிரி க்க அணி, வங்கதேசம் அ ணி யு ட ன் மோதியது. நாணய சுழ ற்சி யில் வெற்றி பெற்ற தென் ஆபிரி க்க அணி துடு ப்பாட்டத்தை தெரிவு செய்தது. தொடக்க வீரர்க ளாக களமி றங்கிய ஹாசிம் ஆம்லா 20 ஓட்டங்களும் டு பிளெ சிஸ் 13 ஓட் டங்களும் எடுத்து ஆட்டமிழந் தனர். அடுத்து கள மி றங் கி ய இங்ராம் 1 ஓட்டங் க ளு ம் பெஹார்டியன் 16 ஓ ட் ட ங் க ளும் எடுத்து ஆட்டமிழந்தனர். சிறிது நேரம் தாக்குப்பிடித்த ஆன்டாங் மட்டுமே 41 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

20 ஓவர் முடிவில் தென் ஆபிரிக்க அணி 7 விக்கெட் இழப்பிற்கு 129 ஓட்டங்கள் எடுத்து வங்கதேசம் சார்பில் இலியாஸ் சன்னி 2 விக்கெட் கைப்பற்றினார்.

சுலப இலக்கை விரட்டிய வங்கதேச அணிக்கு சித்திக் (5) ஏமாற்றினார். அடுத்து வந்த அனாமுல் (4), முஸ்பிகுர் ரஹிம்(7), நசிர் ஹொசைன் (0) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். விக்கெட் ஒருபுறம் சரிந்தாலும் மறுமுனையில் பொறுப்பாக ஆடிய முகமது அஷ்ரபுல் (40) நம்பிக்கை தந்தார். மகமதுல்லா (28), ரஹ்மான் ஆட்டமிழக்காமல் (27) கைகொடுக்க வங்கதேச அணி 19.5 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 132 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

தென் ஆபிரிக்கா சார்பில் டிலாங்கே 3 விக்கெட்டுகளும், பார்னல் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.ஏற்கனவே சிம்பாவேயிடம் தோல்வி கண்ட தென் ஆபிரிக்க அணி 4 புள்ளிகளுடன் (3 போட்டி) கடைசி இடத்தில் உள்ளது. தலா இரண்டு வெற்றியைப் பெற்ற சிம்பாவே (3 போட்டி), வங்கதேச (4 போட்டி) அணிகள் தலா 8 புள்ளிகளுடன் முதலிரண்டு இடத்தில் உள்ளன.தென் ஆபிரிக்க அணி இறுதிச் சுற்றுக்கு முன்னேற சிம்பாவே அணிக்கெதிராக இன்று நடைபெறவுள்ள கடைசிப் போட்டியில் அதிக ரன் ரேட் வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும்.

## கூடைப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)




யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் யாழ்.பல்கலைக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் 11 புள்ளிகளால் யாழ்.பல்கலைக்கழக அணியை தோற்கடித்து யாழ்.மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

இப்போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இவ்விரு அணிகளுக்குமிடையில் நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி 58 புள்ளிகளையும் யாழ்.பல்கலைக்கழக அணி 47 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. இதேபோன்று எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமையும் கூடைப்பந்தாட்ட போட்டி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிம்பாவேயை வீழ்த்தியது வங்கதேசம்



சிம்பாவேயில் இடம்பெற்றுவரும் உத்தியோகபூர்வமற்ற முத்தரப்பு டுவெண்டி டுவெண்டி தொடரின் நேற்று முன்தினம் போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது.

சிம்பாவே அணிக்கெதிராக இடம்பெ ற்ற இப்போட்டி யில் பங்களா தேஷ் அணி 6 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றது. ஹராரேயில் இடம் பெற்ற இப் போட்டியில் நாண யச் சுழற்சியில் வெ ற் றி பெற்ற சிம் பாவே அணி முத லி ல் துடுப் பெடு த்தாடத் தீர் மானி த்தது. இ த ன் படி முதலில் துடுப்பெடு த்தா டிய சி ம் பா வே அ ணி 20 ஓவர்க ளில் 8 விக் கெட்டுக்க ளை இழ ந்து 149 ஓட் டங்க ளைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சிம்பாவே அணிசார்பாக ஹ மில் ட் டன் மஸகட்ஸா 54 பந்துகளில் 56 ஓட்டங்களையும் பிரென்டன் ரெய்லர் 13 பந்துகளில் 27 ஓட்டங்களையும் ஸ்ருவர்ட் மற்சிக்கென்யேரி 23 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக மஷ்ரபி மோர்தஷா 4 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் எலியஸ் சணி, அபுல் ஹசன், ஷியவுர் ரஹ்மான், மஹமதுல்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். 150 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 17.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அவ்வணியின் மத்திய வரிசை வீரர்கள் சிறப்பாக ஆடி இந்த வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக நசீர் ஹொசைன் 31 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும் முஷ்பிக்கூர் ரஹீம் 23 பந்துகளில் 31 ஓட்டங்களையும் மஹமதுல்லா 14 பந்துகளில் ஆட்டமிழக்கமால் 29 ஓட்டங்களையும் பெற்றனர். போட்டியின் நாயகனாக பங்களாதேஷ் அணி சார்பாக சிறப்பாகப் பந்து வீசி மஷ்ரபி மோர்தஷா தெரிவானார்.

# யாழ்ப்பாணம் பிறிமியர் லீக் (JPL)

# சென்றலைட்ஸ் அணியை வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்தது கேசீசீ



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் சென்ற லைட்ஸ் அணியை 8 விக்கெட்டுக்கள் வித்தியா சத்தில் வீழ்த்தி கே.சீ.சீ.சீ. அணி சம்பியனானது.

கே.சீ.சீ.சீ. அணியும் சென்றலைட்ஸ் அணியும் மோதிக்கொண்ட இறுதியாட்டம் நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கே.சீ.சீ.சீ. அணியின் தலைவர் கிருபவன் களத்தடுப்பை முதலில் தெரிவு செய்தார்.

இதன் பிரகாரம் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென்றலைட்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர்களினால் நிர்ணயித்த 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 134 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

135 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களம் கண்ட கே.சீ.சீ.சீ. அணி ஜெயரூபனின் அதிரடித்துடுப்பாட்டம் கை கொடுக்க 15 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தது.

இந்த ஆட்டத்தில் சிறப்பாக செயற்பட்ட ஜெயரூபன் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். 6 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 74 ஓட்டங்களை இவர் சேர்த்திருந்தார்.

போட்டியின் சிறந்த களத்தடுப்பாளராக சந்திரவதனன் தெரிவுசெய்யப்பட்டதோடு தொடரின் நாயகனாகவும் இப் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராகவும் சைலேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

### எமக்கு களம் அமைத்து தந்தால் தேசிய ரீதியிலும் சாதிப்போம்

யாழ்ப்பாணத்திலுள்ள வீரர்களுக்கு சிறந்ததொரு களமாக யாழ்ப்பாணம் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி அமைந்திருந்தது என கே.சீ.சீ.சீ. அணித் தலைவர் சரவணபவன் கிருபவன் தெரிவித்தார்.

அத்தோடு எதிர் காலத்திலும் இவ்வாறான போட்டிகள் நடத்தப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

யாழ்ப்பாணம் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

கே.சீ.சீ.சீ. அணியும் சென்றலைட்ஸ்



அணியும் மோதிக்கொண்ட இந்த ஆட்டத்தில் கே.சீ.சீ.சீ. அணி வெற்றி பெற்றிருந்தது இந்த வெற்றி தொடர்பாக கருத்துக் கூறும் போதே கே.சீ.சீ.சீ. அணித்தலைவர் கிருபவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது அணி மிகச்சிறப்பாக இந்தத் தொடர்பில் செயற்பட்டதாகவும் அதற்கு ஒத்துழைப்பும் பங்களிப்பும் வழங்கிய வீரர்கள் உட்பட அனைவருக்கும் தாம் நன்றி சொல்வதாகவும் அவர் கூறியிருந்தார்.

கிரிக்கெட் லீக் போட்டியில் முதலிடத்தைப் பெற்று கிண்ணத்தை இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் அர்ஜுனரணதுங்கவிடம் பெறக்கிடைத்த சந்தர்ப்பத்தை தன் வாழ்நாளில் மறக்க முடியாது எனவும் கூறியிருந்தார்.

மேலும் யாழ்ப்பாணம் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி போன்று எதிர்காலத்திலும் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். இங்குள்ள திறமையாளர்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கப்பட வேண்டும்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றிருந்த போதும் களத்தடுப்பை முதலில் தெரிவு செய்வதற்கு முக்கிய காரணம் எமது அணியின் பந்துவீச்சாளர்களிடம் நான் வைத்திருந்த நம்பிக்கையே.

பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டதற்காரணமாக எதிரணியினரால் நிர்ணயித்த வெற்றியிலக்கை எமது அணியின் துடுப்பாட்ட வீரர்கள் இலகுவாக எட்ட முடிந்ததுஎன்றார்.











## மன்மோகனின் ...

சந்திப்பில் பேசப்பட்டது.

போரின் போது இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த மூன்று இலட்சம் மக்களில் 3ஆயிரம் பேரே இன்னும் மீளக் குடியேற்ற வேண்டியிருப்பதாக பொய்யான புள்ளிவிபரத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப்பிரதமர்மன்மோகன்சிங்கிடம்கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுப் போயுள்ள நிலையில், அது தொடர்பில் பேசமுற்பட்ட இந்தியப் பிரதமரை மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ எடுத்துக் கூறி மன்மோகன் சிங்கின் கவனத்தை திசை திருப்பியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (8-11)

## மகிந்தவின் ...

அமைச்சர் கலாநிதி ஹேமகுமார நாணயக்கார ராஜினாமாச் செய்துள்ளார். நாட்டின் விவசாயத்துறை தொடர்பான முட்டாள் தனமான தீர்மானங்கள் பலவற்றை அரசாங்கம் மேற்கொண்டதன் காரணமாகவே தான் ராஜினாமாச் செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நெல் கொள்வனவுக்கான உத்தேச விலை 24 ரூபாய் என உறுதியளிக்கப்பட்டது. இப்போது அது 18 ரூபாயாகக் குறைக்கப்பட்டமை விவசாயிகளுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து கொண்டு நான் இதைக் கூறவில்லை.

அநுராதபுரம், பொலநறுவை, மெதிரிகிரிய, கடுவெல்ல, கினிதம, ஹிங்குராக்தமன உட்பட்ட இடங்களுக்குச் சென்று விவசாயிகளைச் சந்தித்தேன். இப்பயணங்களுக்கு பின்னர் அறிக்கை ஒன்றைத் தயாரித்து பொறுப்பான அனைவரிடமும் சமர்ப்பித்து இப்பிரச்சினையை தீர்க்குமாறு கூறினேன்.

ஆனால் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. குண்டசாலை விவசாயக் கல்லூரி உள்ள இடத்தில் விமான நிலையம் ஒன்றை அமைப்பது முட்டாள்தனமான திட்டம். சீதா எலிய விதை நிலையத்திலும் அவர்கள் விமான நிலையம் ஒன்றை அமைக்க விரும்புகிறார்கள் எனவும் அவர் கூறினார்.

இறுதியாக 2004ஆம் ஆண்டு காலி மாவட்டத்தில் இருந்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான ஹேமகுமார பின்னர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் இணைந்து விவசாயத் துறை அமைச்சராக பதவி வகித்தார்.

அவர் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உடல்நலக் குறைவு காரணமாக அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்த அவர், 2010 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிடவில்லை. பின்னர் அவர் ஜனாதிபதியின் விவசாயத்துறை ஆலோசகராக நியமிக்கப்பட்டார். (8,11)

## கண்ணிவெடி ...

• தந்தையாருமான தனபாலசிங்கம் குலசிங்கம் (வயது 32) என்பர்களே படுகாயமடைந்தவர் களாவர். இவ் வெடிப்புச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த மூவரும் காலை 6.00 மணிக்கு தமது பணியிடத்துக்குச் சென்று மிதி வெடியகற்றும் பணியில் இடுபட்டுக் கொண்டு இருந்துள்ளனர்.

இதன்போது புற்கள் நிறைந்த நிலப் பகுதியொன்றில் கண்ணி வெடி இருக்கின்றதா என கண்ணி வெடி கண்டறியும் உபகரணத்தினாலும் புற்களினை அகற்றும் உபகரணத்தாலும் மூவரில் ஒருவர் ஆராய முற்பட்டுள்ளார்.

எனினும் துரதிர்ஸ்ட வசமாக புல்லின் அடியில் காணப்பட்ட கிரனைட் தட்டுப்படவே அது மிகச் சத்தமாக வெடித்துள்ளது.

இதில் அகற்றியவர் உட்பட அருகில் நின்ற இருவரும் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த மூவரும் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (8-4)

## தகைமையுள்ள ...

300 பேர் பிரதேச செயலகங்களில் இணைத்துக் கொள்ளப்படுவர் என அவர் மேலும் கூறினார்.

பட்டதாரி பயிலுனர் நியமனம் தொடர்பில் பட்டதாரிகள் மத்தியில் பல்வேறு கருத்துக்கள் தொடர்பாக குழப்பநிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பூங்கா அமைக்க ஆலோசனை பெறல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை நல்லூர் பூங்காவை நவீன முறையில் புனரமைப்புச் செய்ய முடிவு செய்துள்ளது. அந்த வகையில் அதனை அழகுபடுத்தி புனரமைப்புச் செய்வதற்கு புத்திஜீவிகள், நலன் விரும்பிகள் என்போரிடமிருந்து ஆலோசனைகள் எதிர்பார்க்கப்படுகின்றதாக யாழ்மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார். (8)

# மீள்க்குடியேறிய ...

கடற்படைச் சிப்பாய் ஒருவரினால் தெரிவிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்த அனைவரும் வெளியேற்றப்பட்டதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

யுத்த மோதல்கள் காரணமாக ஐம்பது வீட்டுத்திட்டத்திலிருந்து வெளியேறிய குடும்பங்கள் பேசாலை புகையிரத நிலையத்தை அண்டிய பகுதிகளில் ரயில் பாதையிலேயே கொட்டில்களை அமைத்து குடியிருந்து வந்துள்ளனர்.

இதேவேளை மதவாச்சி-மன்னார் ரயில் பாதையில் மடு றோட்டிலிருந்து தலைமன்னார் வரையிலான ரயில் பாதை அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதனால் ரயில் பாதையில் குடியிருந்த குடிசைகள் அகற்றப்பட்டு அங்கு குடியிருந்தவர்கள் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். இதனையடுத்தே ஐம்பது வீட்டுத் திட்டத்தில் இந்தக் குடும்பங்கள் மீள்குடியேறி இருக்கின்றன.

மீள்குடியேற்றத்திற்காக வீடுகளைத் திருத்தவும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் குடும்பம் ஒன்றிற்கு ஒரு லட்சம் ரூபாய் மானியமாகவும் 2 லட்சம் ரூபாய் கடனாகவும் வழங்கப்பட்டு இந்தக் குடும்பங்கள் ஐம்பது வீட்டுத் திட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

வெளியேற்றப்பட்ட குடும்பங்களை மீண்டும் அவர்களது இடங்களில் சென்று வசிப்பதற்குரிய முயற்சிகளுக்காக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக பேசாலை பங்குத் தந்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச செயலாளரும் கூறியுள்ளார்.

இச் சம்பவம் குறித்து மன்னாரில் உள்ள கடற்படை அதிகாரியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

மேலிடத்தின் உத்தரவுக்கமையவே கடற்கரைப் பகுதியில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரமுள்ள பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்தி யிருப்பதாகவும், இந்தியாவில் இருந்து சந்தேகத்திற்குரிய ஒரு குழு வினர் இங்கு வந்துள்ளது தொடர்பில் தகவல் கிடைத்திருப்பதனாலுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார். (8-11)

# முல்லைத்தீவில் ஆயுதம் மீட்பு

இறுதி யுத்தம் இடம்பெற்ற முல்லைத்தீவு-அம்பலவன்பொக்கணை பிரதேசத்தி லிருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு ஆயுதங்களை யாழில் இருந்து சென்றிருந்த விசேட ரகசியப் பொலிஸாரினால் மீட்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து குறித்த பொலிஸ் பிரிவினர் நடத்திய சோதனையின் போது இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் ஒரு கன்ரர் ரக கனரக வாகனத் திலும் உழவு இயந்திரத்திலும் பாதுகாக்கப்பட்ட முறையில் இந்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8,11)

# இந்தியாவில் ...

விடுத்துள்ளார். நேற்று இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இலங்கையில் ஈழ சுதந்திரம் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

மேலும் தமிழர்கள் இன்னும் நூறு முள்ளிவாய்க்கால் படுகொலைகளைச் சந்திக்க நேரிடும் என்று பேசிய இலங்கை அரசின் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவைக் கண்டித்து யூலை 15 ஆம் திகதி தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் புதிய தமிழகம் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை கச்சதீவுப் பகுதிக்கு வரும் தமிழக மீனவர்களை கைது செய்வோம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேசியுள்ளதற்கு இந்திய மத்திய இணை அமைச்சர் நாராயணசாமியும் கண்டனம் தெரிவித்துள்ளார். (ந-8-11)


வியப்பான வியாபார விருத்திக்கு வின்றிச் ஐஸ்கிறீம் இயந்திரம்

50,000/- மேல் மாத வருமானம்



❋ சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
❋ நவீன தொழில் நுட்பம்
❋ இலவச பயிற்சி
❋ விற்பனையின் பின் சேவை

விலை ரூ.99,000/- இல் இருந்து

ஒரு வருட உத்தரவாதம்

புத்தம் புதியது

WINRICH INTERNATIONAL (PVT) LTD
(Member of pluss int.)
No.18, Ground floor, Lucky plaza, st.Anthony's Mawatha
Kollupitiya, Colombo 03, Srilanka

தமிழில் தகவல் பெற (யோகேஸ்)
Hot line:- 077 391 8870 , 077 106 6902

**AAT கற்கை நெறியை பூர்த்தி செய்தோர்க்கு**

**AAT** கற்கை நெறியை பூர்த்தி செய்தோருக்கு **CIMA-UK CBA** க்ற்கை நெறியிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும் **CIMA UK** ற்குரிய கட்டணங்களும் 50% ஆல் குறைக்கப்பட்டுள்ளது. குறுகிய காலத்திற்கே இச்சலுகை அறிவிக்கப்பட்டுள்ளதால், உங்கள் **AAT** சான்றிதழ்களுடன் 324, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள **MCS** CIMA Listed College க்கு நேரில் வந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

இணைப்பாளர்
CIMA@MCS 772 395 895

**Store காணி விற்பனைக்கு**

புது சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி நல்லூர் வீதியில் 3/4 பரப்பு காணி 15 அடி உயர மதிலுடனும் 14 அடி அகல கேற்றுடனும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- 021 222 3826
021 222 7172

(8689)

Cambridge Management College

FRENCH, DEUTCH, SINHALA & ENGLISH
ஆகிய மொழிகளை இலகுவாகவும் எளிமையாகவும் லேசாக, எழுத, வாசிக்க, பேச கற்பிக்கப்படுகின்றது.

INFORMATION TECHNOLOGY
DIPLOMA IN MS.OFFICE
DIPLOMA IN HTML
DIPLOMA IN WEB DESIGNING
ஆகிய கணனிக் கற்றை நெறிகளும் சிறுவர்களுக்கான ICT, English மொழியும் கற்பிக்கப்படுகின்றது.

23, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம் (கச்சேரி பஸ் நிலையம் முன்பாக)
தொ.பே:- 021 222 1818 / 077 774 0999
(8683)

**காணி விற்பனைக்கு உண்டு**

கைதடி வடக்கு கைதடியில் ஐந்து வீட்டுத் திட்ட வீடுகளின் பின்புறமாகவும், சச்சிதானந்த ஆச்சிரமத்திற்கு அருகாமையிலும் 10 பரப்பு காணி (3 வீடுகள், அரிசி ஆலை அமைக்க உகந்தது) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகட்கு:- (1) 0771024807
(2) 0775052619
(8686)

**வேலைவாய்ப்பு**

வவுனியாவில் இயங்கி வரும் பிரபல முகாமைத்துவ நிறுவனமான INNOVAGE INTERNATIONAL COMPANY க்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை. 6 மாத கால பயிற்சி வழங்கப்படும். (பயிற்சியின் போது 8000/- சம்பளம் வழங்கப்படும். பின்பு 35000/- சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு. தங்குமிடம் இலவசம்)

தகைமை - G.C.E O/L
தொடர்பு: 024-7900171, 077-0308484
(8687)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் (ICRC க்கு அருகில்) புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0772230934
075392801
0773732708
0773296407
(8699)



நாளை (25.06.2012) சுழிபுரம் - பறாளாய் ஈசுர விநாயகரின் தேர்த் திருவிழா

நேரம் :- மு.ப. 11.45 மணியளவில்

'நம்பிக்கை கொண்டோர்க்கு தும்பிக்கையான் துணை'

சோழியூரான்-பிறைசூடிக்குரு

(8700)

**A/L - 2013 வணிகக்கல்வி**

வணிக முகாமைத்துவம்
DCM யாழ்.நகர்
பொருளியற் கல்லூரி யாழ்.நகர்
V. முரளி B.B.A(Fm.Spl)




வினா விடை வகுப்பு
பொருளியற் கல்லூரி இணுவில்
BECON யாழ்.நகர்
றோயல் அக்கடமி சங்கானை
நேர அட்டவணை அலுவலகத்தில்
(C-321)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.